பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 16 திங்கட்கிழமை 30.01.2023 கதிர் 83

**இனிது ரகசியம் அல்ல!**

வேலியே பயிரை மேய்ந்த கதை ஒன்று நேற்றைய காலைக் கதிரில் செய்தியாக வந்திருந்தது. பரீட்சை மோசடிக்குத் துணை நின்ற இரு ஆசிரியர்கள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருக்கி றார்கள். அவர்களை ☞2

# கட்டங்கட்டமாக அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை



எஞ்சி இருக்கின்ற அமைச் சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் பத்தும் கட் டங்கட்டமாக நிரப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நடவடிக்கை எடுத்துள் ளார்.

அதற்கு அமைவாக 6 அமைச் சுக்கள் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சிக்கும், 4 அமைச் சுக்கள் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க விரும்புகிறவர்க ளுக்கும் வழங்கப்படவுள் ளன. ☞2

### தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்

## அச்சுறுத்தல் கண்டு பதவி விலகக்கூடாது

### சுமந்திரன் வலியுறுத்து



தென்மராட்சி, ஜன 30

அச்சுறுத்தல்களுக்குப் பயந்து பதவி விலகுபவர்களாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருக் கக்கூடாது என நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி தமிழரசுக்கட்சி அலுவ லகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப் பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## தேர்தல் பற்றி இந்த வாரம் வர்த்தமானி அறிவிப்பு வரும்

### ஆணையாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மார்ச் மாதம் 9 ஆம் திகதி என தேர்தல் கள் ஆணைக்குழு அறிவித்தாலும் அது தொடர்பான வர்த்தமானி வெளி யிடப்படாதது தேர்தல் நடத்தப்படுமா என்கிற சந்தேகத்தை எழுப்பியிருந்தது. அந்த வர்த்தமானி அறிவித்தல் ☞2



## தேர்தல் ஆணைக்குழுவினருக்கு மிரட்டல் வெளிநாட்டிலிருந்து

### பொலிஸ் பேச்சாளர் தகவல்

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மிரட்டல்கள் அனைத்தும் வெளிநாடுக ளில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தொலைபேசி மூலமான கொலை அச்சுறுத்தல்கள் மற்றும் குறுஞ்செய் திகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்தே வந்துள்ளன. அது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசார ணைகளைத் தொடங்கியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது: ☞9

## கொள்ளைக் கும்பல் பொலிஸாரால் கைது

கோப்பாயில் வாள்களுடன் புகுந்து கொள்ளையடித்த கும்பலைச் சேர்ந்த நால்வரைத் தாம் கைது செய்துள்ள னர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிட்ட நகைகள், வாள் கள் என்பன சந்தேகநபர்களிடமி ருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப் புப் ☞9

## காணித் தகறாறில் இருவர் படுகொலை

### புல்மோட்டையில் நேற்று சம்பவம்

திருகோணமலையில் காணித் தகறாறில் இருவர் நேற்றுப் பிற்கல் கொல லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புல்மோட்டை, பம்ஹவுஸ் என்ற இடத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் மேலும் 4 பேர் காயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இச்சம்பவம் இன்று (29) பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

காணி எல்லை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை இரு குழுக்களுக்கு இடையேயான அடிதடியாக மாறியதில் இந்தக் கொலைகள் நிகழ்ந்தன ☞9

## வன்கொடுமை குற்றச்சாட்டில் அரசியல்வாதி தெற்கில் கைது



ஆசிரியை ஒருவரை பாலியல் வன் கொடு மைக்கு உட்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட் டின் கீழ் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினரான அரசியல்வாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை பெப்ரவரி 10 ஆம் நாள் வரை ☞9

## இளைஞர் ஆலோசனை குழு பிரதேச சபைகளில் நியமனம்

### புதிய திட்டம் என்கிறார் சஜித்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் வென்றதும் ஒவ்வொரு சபைக்கும் அதன் எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளை உள்ள டக்கிய இளைஞர் ஆலோசனைக் குழுக்கள் உருவாக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி ☞9



## மோ. சைக்கிள்கள் மோதி இளைஞர் பரிதாபச் சாவு



சாவகச்சேரியில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றோடொன்று வேகமாக மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்.

யாழ். சாவகச்சேரி, சங்கத்தானையில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாதையை கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கி ளுடன் மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸார் தெரி வித்தனர். ☞9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்த வேலையைச் செய்யச் சொன்ன அதிபரையும் கட்டாய ஓய்வில் அனுப்பும்படி பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதுதான் அந்தச் செய்தி.

பாவம் அதிபரின் மகனை வெற்றிபெற வைக்கப்போய் அந்த ஆசிரியர்கள் இருவரும் வாழ்க்கையில் தோல்வியடைந்துவிட்டார்கள். இலங்கையில் கல்வி இலவசமாக்கப்பட்டதன் மூலம் அனைவருக்கும் கல்வி என்பது சமத்துவமானது. அந்தச் சம வாய்ப்பின் மூலம்தான் இங்கு கடைநிலையில் இருப்பவரின் மகனும் மருத்துவராகவும் பொறியாளராகவும் இன்னும் பல உயர் பதவிகளையும் அடைய முடிகின்றது.

பணம் படைத்தவன், பணம் இல்லாதவன் என்கிற ஏற்றத் தாழ்வு கல்வியைப் பெறுவதற்கான வசதி வாய்ப்புக்களில் வேறுபாடுகளை குடும்பங்களின் அடிப்படையில் ஏற்படுத்தினாலும் படித்தால் பயனை அடைய முடியும் என்கிற வாய்ப்பு அனைவருக்கும் சமமாகவே இருந்து வந்திருக்கிறது, வருகிறது.

தண்டனைக்குள்ளாக்கப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்களின் செயல்கள் இந்த சமவாய்ப்பை கேள்விக்குள்ளாக்கி கீழ்மைப்படுத்தியிருக்கிறது. அதிபர் என்கிற அதிகாரம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றைய மாணவர்களின் வாய்ப்பைத் தட்டிப் பறிக்கும் வகையில் இந்த அதிகார துஸ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அத்தகைய நிலையில் கட்டாய ஓய்வு என்பதே அவர்களுக்கான ஆகக் குறைந்த தண்டனையாகத்தான் தோன்றுகின்றது.

கல்வியின் சம வாய்ப்பைச் சீரழிப்பதென்பது எதிர்காலத்தை நிர்மூலமாக்குவதற்குச் சமம். எனவே இவர்கள் மீது குற்றவியல் சட்டங்களின் கீழ்தான் உண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் மனிதாபிமானம், பாவம் பார்க்கும் அதிகாரிகள் அவர்களை சமூக, பொருளாதாரப் பாதுகாப்போடு பத்திரமாக வீடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இத்தகைய குற்றங்களுக்கு கடுமையாக நடவடிக்கை எடுப்பதன் மூலம்தான் அவை எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த முடியும். கல்வியில் யாரும் கை வைப்பதை அனுமதிக்கக்கூடாது.

இன்று சொல்ல வந்த விடயம் அதுவல்ல, அதைச் சொல்ல வந்தபோது இந்த விடயமும் ஞாபகத்தில் வந்ததால் கொட்டிய அறச் சீற்றம் அது. இன்று சொல்ல வந்த விடயமும் ஆசிரியர்களின் தவறுகள் குறித்ததுதான்.

மன்னாரைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் தங்கள் பாடசாலைக்கு வாரத்தில் இருநாள்கள், செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் தொடர்ந்து விடுமுறை எடுத்து வந்திருக்கிறார்கள். கடந்த இரண்டு மூன்று மாதங்களாக இது நடந்து வந்திருக்கிறது. ஆனால் அந்தப் பாடசாலை அதிபரும் ஏனோ அதனைக் கண்டுகொள்ளவில்லை மற்றவர்களும் அது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

இருந்தாலும் எந்த இடத்திலும் இது போன்ற விடயங்களைக் கூர்ந்து அவதானித்து அவர்களுக்கு ஆப்பு வைப்பதற்கென்று ஒரு சிலராவது நியாயஸ்தர்களாக இருப்பார்கள் இல்லையா அப்படி யாரோ ஒரு புண்ணியவான் இதைப் பற்றி கல்வித் திணைக்களத்திற்குக் கொழுத்திப் போட்டுவிட்டார்.

விசாரித்தால், இந்த இரு ஆசிரியர்களும் தங்கள் பாடசாலையை விட்டு விட்டு ஒவ்வொரு வாரமும் அந்த இரு நாள்களும் பொலன்னறுவைக்குச் சென்று அங்குள்ள ஒரு பாடாசலை மாணவர்களுக்கு பாடசாலை நேரத்திலேயே வகுப்பெடுத்திருக்கிறார்கள். சரி பொலன்னறுவை போன்ற இடங்களில் பின்தங்கிய மாணவர்களுக்கு வகுப்பெடுப்பது நல்லதுதானே என்று பார்த்தால்..... அந்த இரு நாள்களும் சிறப்பு வகுப்பெடுக்க அங்குள்ள பழைய மாணவர் சங்கத்திடமிருந்து பணமும் பெற்றுக்கொண்டிருக்கிறார்களாம் இருவரும்.

அவர்கள் கடமையாற்றும் பாடசாலையில் ஒரு சம்பளம். அதே கடமை நேரத்தில் இன்னுமொரு இடத்தில் இரண்டாவது சம்பளம் என்று கொஞ்சம் உழைக்க பிழைக்க இருவரும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது வெளிச்சமாகி இருக்கிறது. இவர்கள் இப்படி உழைக்கிறார்களே என்று பொலன்னறுவையில் உள்ள மாகாண கல்வித் திணைக்களத்திற்கு யாரோ போட்டுக்கொடுக்க அங்கிருந்து வடக்கு மாகாணத்திற்கு "இதென்ன நடக்கிறது?" என்ற பாணியில் கேட்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகுதான் விழித்துக்கொண்ட மாகாணத் திணைக்களம் தனக்குக் கீழே இருப்பவர்களிடம் கேள்வி எழுப்ப அந்தக் கடிதங்கள் ஒவ்வொன்றாகக் கீழே போய்க்கொண்டிருக்கிறது.

அரச ஊழியர்கள் விடுமுறை பெறுவதற்கென்றொரு நடைமுறை இருக்கின்றது. அப்படியிருக்க பல மாதங்களாக ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட இரண்டு நாட்கள் அவர்கள் விடுமுறை பெற எப்படி அனுமதி வழங்கப்பட்டது என்பது உட்பட இப்போது விடயத்தைக் கிளறத் தொடங்கியிருக்கிறார்கள். விவகாரம் இனி எப்படியும் பூதாகரமாக வந்து நிற்கும் என்றுதான் தோன்றுகின்றது. ஏனென்றால் தமது பாடசாலை மாணவர்களின் கல்வியைப் பற்றி இரண்டு நாள்கள் அந்த இரு ஆசிரியர்களும் அதை அனுமதித்த அதிபரும் மறந்துவிட்டார்கள் இல்லையா? அது நியாயப்படுத்த முடியாத குற்றம்தானே.. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் வாசகர்களே?

**- இடிமின்னல் -**

## கட்டங்கட்டமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பத்தில் 12 அமைச்சுக்கள் எஞ்சி இருந்தன. அவற்றுள் 7 அமைச்சுக்கள் மொட்டுக் கட்சிக்கும், 5 அமைச்சுக்கள் ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றவர்களுக்கும் என ஒதுக்கப்பட்டிருந்தன.

அவற்றுள் முதல் கட்டமாக மொட்டு சார்பில் பவித்ரா வன்னியாராச்சிக்கும், ஜனாதிபதியின் சார்பில் ஜீவன் தொண்டமானுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மொட்டு சார்பில் இன்னும் 6 பேருக்கு அமைச்சுக்கள் வழங்கப்படவுள்ளன. அவற்றுள் ரோஹித அபேகுணவர்தன, ஜோன்சன் பெர்னாண்டோ, எஸ்.எம். சந்திரசேன, மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்டவர்கள் அடங்குகின்றனர்.

இவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்றும், மக்கள் மத்தியில் இவர்களுக்கு நல்ல பெயர் கிடையாது என்றும் கூறி வந்த ஜனாதிபதி இப்போது முடிவை மாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஜனாதிபதி சார்பில் இன்னும் நால்வருக்கு வழங்கப்படவுள்ளன. அவர்களுள் வஜிர அபேவர்த்தன, துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் அடங்குகின்றனர்.

ஏனைய இரண்டில் ஒன்று ராஜித சேனாரத்னவுக்கு வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருகின்றது. ராஜித அதை மறுக்கவில்லை. இருந்தாலும், தனியே சென்று அரசில் இணையமாட்டேன் என்று கூறியுள்ளார்.

மற்றைய ஒன்று அரசில் உள்ள ஜனாதிபதியின் நெருக்கமான ஒருவருக்கு வழங்கப்படவுள்ளது.

பஸில் ராஜபக்ச பிரயோகித்த கடும் அழுத்தம் காரணமாகவே இந்த நியமனம் ஆரம்பமாகியுள்ளது என்று அறிய முடிகின்றது.

ஒரே நேரத்தில் எல்லா அமைச்சர்களையும் நியமித்தால் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படும் என்பதால் கட்டங்கட்டமாக நியமிப்பதற்கு ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார். இதற்குப் பஸிலும் இணக்கம் தெரிவித்துள்ளார். இதற்கு அமைவாகவே பவித்ராவும் ஜீவனும் முதலில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

## அச்சுறுத்தல் கண்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு நாட்டில் சுதந்திரமான தேர்தலை நடத்த விடாமல் தடுக்கின்ற எதேச்சதிகார வன்முறைப் போக்கினைக் கடுமையாக கண்டிக்கிறோம்.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் எவரும் இதற்குப் பயந்துவிடக் கூடாது.நீங்கள் சுயாதீனமானவர்கள் என்ற நம்பிக்கையோடு நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

அச்சுறுத்தல்களுக்குப் பயந்து பதவி விலகுபவர்களாக அவர்கள் இருக்கக்கூடாது.

இப்படியான அச்சுறுத்தல்களைச் செய்பவர்களைக் கண்டுபிடித்து உடனடியாகச் சட்டத்தின் முன்னிறுத்த வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவிற்கு பின்பாக நின்று அவர்களுக்கு சக்தியைக் கொடுத்து இந்த தேர்தலை சுயாதீனமான தேர்தலாக நடத்த உதவி செய்யவேண்டும்.

இலங்கையின் பெயரிலேயே ஜனநாயக சோலிசக் குடியரசு என்று எழுதப்பட்டுள்ளது.ஆனால் இங்கே ஜனநாயகமும் இல்லை,சோசலிமும் இல்லை. வழக்கமாக ஏதாவது ஒன்று இல்லை என்றால் தான் இருப்பதாக காட்டிக் கொள்ள பெயரிலே அதனைச் சேர்த்துக் கொள்வார்கள் - என்றார் அவர்.

## தேர்தல் பற்றி இந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த வாரம் வெளிவரும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் சகல விடயங்களும் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி இவ்வார காலத்துக்குள் வெளியிடப்படும் என ஆணைக்குழுத் தலைவர் நிமல் புஞ்சிஹேவா

இம்முறை 58 அரசியல் கட்சிகள், 133 சுயாதீன குழுக்கள் ஊடாக நாடளாவிய ரீதியில் 80 ஆயிரம் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை முழுமையாக ஏற்றுக்கொள்வோம். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டு எம்மால் செயற்பட முடியாது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்தும் தீர்மானம் ஆணைக்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களுக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் இணக்கத்துடன்தான் எடுக்கப்பட்டன. ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில் அதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் கிடையாது.

ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவி வகித்த சார்ல்ஸ் பதவி விலகியமை தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படவில்லை. தனிப்பட்ட அல்லது பிற காரணிகளினால் அவர் பதவி விலகியிருக்கலாம். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவதால் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

தேர்தல் தொடர்பான திகதியை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வெளியிடுவார்கள். இதற்கமைய வேட்பு மனுத்தாக்கலை அடிப்படையாக கொண்ட விடயங்கள், தேர்தல் திகதி தொடர்பான வர்த்தமானி இவ்வாரம் வெளியிடப்படும்.

(09ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**

காலைக்கதிர் Kalaikkathir

கட்டுமானத் துறையில் உள்ளவர்களுக்கு

# அரச நிலுவை கொடுப்பனவு படிப்படியாகக் கிடைக்கும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உத்தரவாதம்

கட்டுமானத் துறையில் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவில் உள்ள அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நிலுவையில் உள்ள கொடுப்பனவுகளுக்கு உடனடியாக செலுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

திறைசேரியில் இருந்து பணம் கிடைப்பதற்கு ஏற்ப அவற்றை பகுதி பகுதியாகச் செலுத்துவதில் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது. கட்டுமானத் துறையைச் சேர்ந்தவர்களைப் பாதுகாக்க முடியாவிட்டால், இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நாம் பல பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் குழுவுடன் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் கூறியவை வருமாறு –

நாடு பூராகவும் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கட்டுமானத் துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். அனைவரையும் வீழ்ச்சியிலிருந்து மீட்டுவர ஒரு திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி அவர்களுக்கு தேவையான நிதி ஆலோசனைகளை வழங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். வங்கியில் கடன் பணத்தைச் செலுத்த முடியாமல், இந்த நேரத்தில் அவர்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக அவர்களுக்கு அரசு செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையை செலுத்துவதில் முதன்மை கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திறைசேரியில் இருந்து பெறப்படும் தொகைக்கு ஏற்ப அவற்றை தவணை முறையில் செலுத்த அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது. அவர்களுக்கு கட்டுமானத் துறையில் முதலீட்டு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அவர்கள் அருகிலுள்ள நாடுகளில் உள்ள திட்டங்களுக்கு பரிந்துரைக்கப்படுவதோடு வரிக் கொள்கைகளைக் கூட திருத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தங்களது நிபுணத்துவ அறிவையும் இயந்திரங்களையும் இந்தத் துறையில் அவர்களுக்குப் பயன்படுத்த முடியுமாக இருக்கும். அதன் மூலம் அந்நியச் செலாவணியைக் கொண்டு வருவதோடு, அவர்களின் தொழிலைப் பாதுகாக்கவும் முடியும்.



13 லட்சத்துக்கு அண்மித்த தொழிலாளர்கள் அழுத்தத்துக்கு உட்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. வழக்கமான தொழில் துறையிலிருந்து விலகி வேறு தொழில் துறைக்கு அல்லது வேறு முதலீட்டு முயற்சிகளின் ஊடாக அந்த வளங்களைப் பயன்படுத்தி வேறு தொழில்களுக்கு ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கட்டுமானத் துறையைச் சேர்ந்தவர்கள் இந்த நேரத்தில் கவனிக்க வேண்டியது அரசின் பொறுப்பு. அது நமது கடமை. அதன்படி, அதற்கு எம்மால் செய்யக் கூடிய அத்தனை முயற்சிகளையும் எடுப்போம். – என்றார்.

# ஆஸி. தமிழ் இலக்கிய கலைச்சங்க போட்டி முடிவு வெளியானது!

## 50 ஆயிரம் ரூபா பரிசு பெறும் இலங்கையின் சிறந்த நூல்கள்




ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் இலங்கை எழுத்தாளர்களுக்காக நடத்திய இலக்கியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக ஆஸ்திரேலியாவில் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், கடந்த 2021 ஆம் ஆண்டு இலங்கையில் வெளியான நூல்களில் சிறந்தவற்றைத் தேர்வுசெய்து, அவற்றை எழுதியவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக குறிப்பிட்ட ஆண்டில் இலங்கையில் வெளியான சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு முதலான ஐந்து துறைகளில் வெளியான நூல்கள், அவற்றை எழுதிய எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டிருந்தன.

அதன்பிரகாரம் கிடைக்கப்பெற்ற நூல்களைத் தேர்ந்த இலக்கிய வாசகர்கள் படித்து, பரிந்துரை செய்தவற்றிலிருந்து இறுதிக்கட்டத் தேர்வில் சிறந்த நூல்களாகத் தெரிவான வற்றுக்கு பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இம்முறை சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் மூன்று நூல்கள் போட்டியில் பரிசுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

நாவல், மொழிபெயர்ப்பு துறைகளில் இம்முறை எந்த நூலும் பரிசுக்குரியதாக தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

போட்டி முடிவுகளும் பரிசுத் தொகையும்:

வேப்பமரமும் பவளம் ஆச்சியும் (சிறுகதை)

விவேகானந்தனூர் சதீஸ் எழுதியது – பரிசு – ரூபா ஐம்பதினாயிரம்

கடவுள் என்பது துரோகியாயிருத்தல் (கவிதை)

சி. கருணாகரன் எழுதியது. பரிசு ரூபா ஐம்பதினாயிரம்.

மன்னார் மாதோட்டப் புலவர்கள் – கலைஞர்கள் (கட்டுரை)

அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் எழுதியது.

பரிசு – ரூபா ஐம்பதினாயிரம்.

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழ்களும், 2023 பெப்ரவரி மாதத்தில் குறிப்பிட்ட எழுத்தாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பரிசுத்தொகை – இலங்கை நாணயத்தில் தலா 50 ஆயிரம் ரூபா.

குறிப்பிட்ட பரிசுத்தொகைகளை வழங்க முன்வந்துள்ளவர்கள்:

லெ. முருகபூபதி (மெல்பன்)

எழுத்தாளர் (அமரர்) தெணியான் நினைவுப் பரிசு

ரோய் லெம்பேட் (மெல்பன்)

கலைஞர் அமரர் தொபியாஸ் மக்சிமஸ் லெம்பேட் நினைவுப் பரிசு.

திருமதி சகுந்தலா கணநாதன் (மெல்பன்)

அமரர் திலகவதி சிவகுருநாதன் நினைவுப்பரிசு.

# அட்டாளைச்சேனை ஆலங்குள ஆலயத்தில் பொங்கல் விழா!





(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிதைந்த பழைமையான ஆலயமான ஆலங்குளம் சிவாலயத்தில் பொங்கல் விழா இடம் பெற்றது.

கொட்டும் மழைக்கு மத்தியில் சமய ஆர்வலர்கள் ஒன்று கூடி இந்த விழாவை சிறப்பாக செய்தனர்.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆலங்குளம் ஆலயத்துக்கான நிர்வாகிகளுடன் இணைந்து நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகஸ்தர் கு.ஜெயராஜ் மற்றும் அனைத்து ஆலயங்களின் தலைவர் கு.வடிவேல் சமய ஆர்வலர்கள், ஆலய நிர்வாகிகள் சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் தமிழர் பாரம்பரிய கலையான சிலம்பம், யோகாசனம் போன்றவற்றை வளவாளர் குமாரதாசன் நிகழ்த்தியதோடு வளத்தாப்பிட்டி சத்திய சாயிசேவா நிலையத்தினரின் பஜனையும் இடம்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## என்னதான் நடக்கிறது?

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பின்னணியில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயம் மேற்பரப்பில் சர்ச்சைக்குரியதாக மாறியிருக்கிறது. அதனை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இப்போது தொடர் விவாதத்துக்குரிய விடயமாக மாற்றி வைத்திருக்கிறார். அது ஏன்?

13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தியமை உண்மைதான். ஆனால், அது தேர்தல் காலமான இப்போது மட்டுமில்லை. அதற்கு முன்னர் இருந்தே வலியுறுத்தப்படுகின்றது. இன்னும் சொல்லப்போனால் கோட்டாபய ராஜபக்ச அரச தலைவராக இருந்தபோதிருந்தே வலியுறுத்தப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ச தமிழ்த் தரப்புடன் பேச விரும்புகிறார் என்றபோதும், 13 முழுமையாக நிறைவேற்றப்பட்டால் அதுவொரு நல்லெண்ட சமிக்ஞையாக இருக்கும் என்று அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அவருடனான சந்திப்புக்களிலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியாகவே ரணிலின் முன்பாகவும் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அர்த்தம் 13 மட்டுமே தமிழர்களின் கோரிக்கை என்பதல்ல. தீர்வு தொடர்பான பேச்சில் உண்மையான ஈடுபாடு அரசுக்கும் அரச தலைவருக்கும் இருக்கின்றதா என்பதை வெளிப்படுத்தும் நல்லெண்ணச் செயலாகத்தான் அது கேட்கப்பட்டது. அதையாவது நிறைவேற்றினீர்களானால் உங்களுடன் நம்பிக்கையுடன் பேச்சை தொடர முடியும் என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால், இன்று 13 மட்டுமே ஒரு விடயமாக முன்னிறுத்தப்படுகின்றது. அது ஏன்?

இந்த இடத்தில்தான் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவின் கருத்து கவனிக்கத்தக்கதாக இருக்கின்றது. 13ஐ காட்டி தெற்கில் மீண்டும் இனவாதத்தைக் கிளப்பி வெற்றியை அறுவடை செய்வதற்கான உள்நோக்கமே இது என்கிறார் அவர்.

இலங்கையின் முக்கியமான அரசியல் கட்சிகள் எல்லாமே 13ஐ ஏற்றுக்கொண்டுள்ளன. அதன் அடிப்படையில்தான் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. பின்னர் எதற்கு 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குக் கூட்டங்கள், சர்வகட்சி மாநாடுகள் என்கிற ஆலவட்டங்கள், ஆலாபரணைகள் எல்லாம் என்று அவர் கேள்வி எழுப்புகின்றார். அவையெல்லாம் ஏன் என்றால் அதன் மூலம் இனவாதத்தைக் கிளப்பி அதில் வாக்குகளை அறுவடை செய்வதுதான் இலகுவான விடயம், அதற்காகத்தான் இந்த நாடகம் என்கிறார் அவர்.

அரச தலைவரின் செயல்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது லக்ஸ்மன் கிரியெல்ல சொல்வதை ஏற்றுக்கொள்ளவது நியாயமானதாகத்தான் படுகிறது. தன்னை முற்போக்காளர் என்று விம்பப்படுத்த முனையும் ரணில் விக்கிரமசிங்க என்ன செய்துகொண்டிருக்கிறார்?



## பெண்களிற்கு பெண்கள் வாக்களிக்க வேண்டும்!

### பெண் வேட்பாளர்கள் கோரிக்கை

பெண்களிற்கு பெண்கள் வாக்களிக்க வேண்டும் என பெண் வேட்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கபே அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி பெண் வேட்பாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களை உள்ளடக்கி கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது, பங்குபற்றிய வெள;வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழு உறுப்பினர்களுக்கு ஊடக சந்திப்பும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வளி மாசடைதல் மீண்டும் அதிகரித்துள்ளது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தகவல்!

நாட்டின் பல நகரங்களில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் சரத் பிரேமசிறி தெரிவிக்கையில், பல நகரங்களில் காற்றின் தரம் 100 முதல் 150 வரை உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நிலை அடுத்த சில தினங்களிலும் தொடரலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நிலை எதிர்வரும் மார்ச் மாதம் வரை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தொடரலாம்.

எனவே முகக்கவசத்தை அணிவதன் மூலம் நச்சு வாயு பாதிப்பை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் நாயகமாக சட்டத்தரணி கணேசராசா!

(வி.ரி. சகாதேவராஜா)



உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி முத்துலிங்கம் கணேசராசா உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இலங்கை இறைவரிச் சேவையில் 'பிரதி ஆணையாளர் நாயகம்' எனும் பதவியைப் பெற்ற முதலாவது தமிழர் இவரே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு தமிழ் சங்க செயலாளரான இவர், வெல்லாவெளியில் மூத்தாப்போடி மாணிக்கப்போடி பூசகர் குடும்பத்தில் முத்துலிங்கம் அன்னபூரணம் தம்பதியின் புதல்வராவார்.

இவர் மட்/வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலையில் உயர்கல்வியையும் கற்று பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று வணிகமாணி சிறப்புப் பட்டம் பெற்றார்.

இவர் 1993 ஆம் ஆண்டு திறந்த போட்டிப்பரீட்சை மூலம் இலங்கை இறைவரி சேவையில்ஒருவரிமதிப்பாளராக இணைந்து கொண்டார்.

இவர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், இலங்கை வியாபார முகாமைத்துவ நிறுவகம் போன்றவற்றில் டிப்ளோமா பட்டங்களையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பட்டமும் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி புலமைப்பரிசில் பெற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் மற்றும் இறைவரித்திணைக்கள புலமைப்பரிசில் மூலம் சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 'வரியியலில்' வியாபார முகாமைத்துவ முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுள்ள இவர் இலங்கை சட்டக்கல்லூரியில் பயின்ற ஒரு சட்டத்தரணியுமாவார்.

இலங்கை அரசு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் மூலம் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, பாகிஸ்தான், தென்கொரியா, பொட்ஸ்வானா, நெதர்லாந்து போன்ற பல நாடுகளில் பல தடவைகள் துறைசார் வெளிநாட்டு கற்கைநெறிகளையும் பயிற்சிகளையும் பெற்றுள்ள இவர், இலங்கை இறைவரிச் சேவையில் வரி மதிப்பாளர், சிரேஷ்ட வரிமதிப்பாளர், பொறுப்புவாய்ந்த சிரேஷ்ட வரிமதிப்பாளர், பிரதி ஆணையாளர், ஆணையாளர், சிரேஷ்ட ஆணையாளர் என படிப்படியாக பதவி உயர்வுகள் பெற்று நீண்டகாலம் கொழும்பு தலைமையகத்தில் சிறப்பாக சேவையாற்றிய இவர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒருசேர இரு பிராந்திய பணிமனைகளிலும் ஆணையாளராக சிறப்புற நிர்வாகம் செய்த பெருமையையும் பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'வரி முகாமைத்துவம்' எனும் பாட நெறியை பல வருடங்களாக கற்பிக்கும் வருகை விரிவுரையாளரான இவர், தனது துறைசார் தொழிலுக்கும் அப்பால் கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர், மட்டக்களப்பு பிரசைகள் அமைப்பின் துணைத் தலைவர் மற்றும் சர்வதேச ரோட்டரிக் கழகம், மட்டக்களப்பு கான்ஸர் அமைப்பு, விவேகானந்த நற்பணி மன்றம், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம், வெல்லாவெளி முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபை போன்றவற்றினூடாக பல்வேறு சமூகப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

# வசந்த முதலிகேவின் விடுதலையை வலியுறுத்தி யாழில் கையெழுத்து போராட்டம் முன்னெடுப்பு!





வசந்தமுதலிகேவின்விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்து போராட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக் கப்பட்டிருந்தது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ். பஸ் நிலையத்தில் இந்த கையெ ழுத்து போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இந்தப்போராட்டத்தில்யாழ்.பல் கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

## 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலவச கண்காட்சி!

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலவச கண்காட்சி யொன்றைநடத்ததிட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய சுவடிகள் காப்பக திணைக் களம், மத்திய கலாசார நிதியம், தொல் பொருள்திணைக்களம்மற்றும்அருங் காட்சியகத் திணைக்களம் ஆகியவை இணைந்து இதனை நடத்தத் திட்ட மிட்டுள்ளன.

இதற்கமைய, பெப்ரவரி 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் தேசிய அருங் காட்சியகத்தில் மேற்படி கண்காட்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அரிய பல விடயங் களை மக்களுக்குக் கண்டுகொள்ள முடியுமெனவும் பௌத்த சமய அலு வல்கள் மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்தி ரன குறிப்பிட்டுள்ளார்.

## 7 ஆயிரம் சுயாதீன கண்காணிப்பாளர்கள் உள்ளூராட்சித் தேர்தலுக்காக கடமையில்!

உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிப்ப தற்காக 7 ஆயிரம் சுயாதீன கண்காணிப்பா ளர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரி விக்கின்றன.

பெப்ரல் என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, இதனைத் தெரி வித்துள்ளார்.

அடுத்த வாரம் முதல் மாவட்ட மட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேர்தலுக்கு முன்னரான மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டம் தொடர்பாகவும் கண்காணிப்பாளர்கள் அவ தானம் செலுத்துவார்கள் என்றும் குறிப்பிட் டுள்ளார்.




## தொழு நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு!

இலங்கையில்தொழுநோயா ளிகளில் 10 வீதமானோர் சிறு வர்கள் என கண்டறியப்பட்டுள் ளதாககொழும்புமாவட்டசுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சந்தன கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு கருத்து தெரிவிக் கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கையில் வருடாந்தம் சுமார் 2 ஆயிரம் தொழுநோயாளிகள்பதிவாகுகின் றனர் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

மேலும்தொழுநோய்ஏற்பட்ட ஒருவரின் உடலில் நீண்ட கால மான வெள்ளை அடையாளம் மட்டும்காணப்படுவதால்அதனை அவர்கள் நோயாக கருதி செயற்படுவதில்லை எனவும் வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள் ளார்.

## முழங்காவிலில் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

செந்தமிழோடுயர் சைவமும் தமிழும் தழைத்தோங்க அருஞ்சேவையாற்றிய பொன் னாவெளி மைந்தன் சண்முகம் பாலசிங்கத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முழங்காவில் மகா வித்தியாலய பழைய மாணவர் கள் நடத்தும் மாபெரும் சைக் கிள் மற்றும் மரதன் ஓட்ட போட்டி கள் நடைபெறவுள்ளன.

01.02.2023 அன்று சைக் கிள் ஓட்டப் போட்டியும், 02.02. 2022 மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன.

வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங் கப்படவுள்ளன எனவும் மேல திக விவரங்களுக்கு 077400 4792, 0776966096 ஆகிய தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு நிகழ் வின் ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தொடர்ந்த குறி வைப்புக்கள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 252

மஹிந்தவும் அவரது சகோதரர்களும் தங்களின் ஊழல்களின் வசதிகளுக்காகவும், அதிகாரத்திற்காகவும் மனிதர்களுடன் நட்புப் பாராட்டுவதிலும், தேவைகள் முடிந்தபின் கை விடுவதிலும், கைதேர்ந்தவர்கள் என முன்னர் குறித்திருந்தேன். கொலை செய்யப்பட்ட லஸந்தவுடனும் மஹிந்த, ஊடகவியலாளர் – அரசியல் தலைவர் என்ற கோதாவில் நல்ல நட்பைப் பேணியவர்.

அதேபோல பல தமிழ் ஊடகவியலாளர்களுடனும் ஊடக உரிமையாளர்களுடனும் நட்பை வளர்த்துக் கொண்டு, ஜனாதிபதி தேர்தலுக்கு அவற்றால் ஆதரவு தேடிப்



வித்தியாதரன்

பயன் பெற்றவர்.

பின் நோர்வே பேச்சுவார்த்தைக் காலங்களில் ஊடகவியலாளர் வித்தியாதரன் மூலம் விடுதலைப் புலிகளை நேரடியாகத் தன்னோடு பேசுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு, அதில் இணக்கம் கண்டால், நோர்வேப் பேச்சுக்களைக் கை கழுவ எண்ணியவர். அதற்கு, விடுதலை புலிகளின் தலைவர்களுடனும், மதியுரைஞர் பாலசிங்கத்துடனும் இருந்த வித்தியாதரனது நெருக்கங்களோ அன்றில் ஊடக ஈடுபாடுகளோ காரணம் எனலாம். ஆனால் அவை நடைபெறாது, வெற்றி தெரிகின்றது என்றபோது லஸந்த கொலை செய்யப்பட்ட ஆறாவது வாரத்தில் வித்தியாதரனும் குறி வைக்கப்பட்டு, பட்டப் பகலில் கொழும்பில், இறுதிச்சடங்கு நிகழ்வு ஒன்றில் வித்தியாதரன் மக்களோடும், குடும்பம் உட்பட உறவினர்களோடும் பங்கு பற்றிக்கொண்டிருந்த போது வெள்ளை வானில் கடத்தப்பட்டார். எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது தெரியவில்லை. ஆனால் நடந்தது பகிரங்கமாக்கப்பட்டதும், பல அழுத்தங்களால், அவர் நீண்ட விசாரணைகளின் பின்னர் இரண்டரை மாதங்கள் கழித்து, யுத்தம் முடியும் தறுவாயில் விடுதலை செய்யப்பட்டார்.

கடத்தல் சம்பவம் நடந்து, அது அம்பலமானவுடன், கோட்டாபய ஊடகங்களுக்கு அவரைப் பற்றி அளித்த ஆக்ரோமான செவ்விகளில் ''அவர் (வித்தியாதரன்) கொழும்பில் எங்களுக்கு எதிராகக் குண்டுகள் வைக்க உதவி தரும் பயங்கரவாதி. புலிகளின் விமானத் தாக்குதல்களை வழிநடத்தியவர். ஆகவே நாங்கள் அவரைக் கைது செய்தோம்" எனக் கூறினார்.

சட்டபூர்வமான ஒரு கைது என்றால் ஏன் வெள்ளை வானில் தூக்க வேண்டும் என்பதற்கு பதில் இல்லை. 'அவர் பயங்கரவாதி', 'பயங்கரவாதி' என்ற கூச்சல் மட்டும் தான் கோட்டாவிடமிருந்து வந்தது.

ஆனால் பின்னணிகளில் லஸந்தவின் மரணத்துக்கு பின் அவரது பணியைத் தொடருவோம் என வித்தியாதரன் ஊடகங்களுக்கு உறுதியாகத் தெரிவித்த கருத்தே கோபங்களை தூண்டியது. பழையவற்றை மறந்து அவர் குறி வைக்கப்பட்டார்.

அவருக்கு எதிராகப் பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களை சரிவர சோடிக்கவும் முடியவில்லை. நிரூபிக்கவும் முடியவில்லை. அதனால் கோட்டாபயவினால் அவரது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற பதவிப் பொறுப்போடு 'பயங்கரவாதி' எனப் பிரகடனப்படுத்திய வித்தியாதரனை நீதிமன்றம் சுத்தவாளி என விடுதலை செய்தது.

தமிழ் ஊடகங்களோ சம்பவத்தைக் குறித்து விட்டு, சவர்க்காரத்தில் கையலம்பி, 'அங்கு ஏதோ விடயம் இருக்க வேண்டும்' என்பதோடு விட்டுவிட்டன. இந்தப் போக்கு பின்னாளில் முள்ளிவாய்க்காலில் இருந்த ஊடகவியலாளர்கள் யாபேரும் தேடித்தேடி அழிக்கப்பட்டனர். ஏனெனில் அவர்களிடம் தாக்குதல் நடந்த வேளைகளின் ஆதாரங்கள் இருக்கலாம் என்ற கணிப்பில்.

### சாட்சியத்தின் பரப்புகள்

ஆஸாத் மௌலானாவின் சாட்சியம் பல பரப்புகளை ஈடுபட்டவர்களின் விரிவான தகவல்கள். பெயர்களோடு பதிகிறது. சுருக்கத்திற்காகவும், அவசியம் என்றும் கருதாதவற்றில் பெயர்களை குறிப்பிடாது, ஆனால் சம்பவங்களின் தொடர்புகள் அறுந்து போகாது முடிந்தளவில் கோர்த்துத் தருகிறேன்.

கருணாவைத் தவிர்த்து, பிள்ளையானை ராஜபக்ஷக்கள் வளர்த்தமைக்கு முக்கிய காரணங்கள் இருவருக்கும் இடையே இருந்த வேறுபட்ட குணாதிசயங்களும், பிள்ளையானினது கல்வித் தகைமையும், அவர் சிறு வயதிலேயே விடுதலைப் புலிகளில் சேர்ந்து கட்டுப்பாடுகளுக்கும் உத்தரவுகளுக்கும் அடங்கிப் போகும் தன்மையும், யாவருடனும் எளிமையாக பழகுவதும்தான் எனவும், மாறாகக் கருணா விடுதலைப் புலிகளின் தளபதியாக ஆளுமையுடன் இருந்து பிரிந்து வந்தமையால், இரண்டாம் தர இராணுவ அதிகாரிகளின் உத்தரவை அவர் ஏற்கவோ, அவர்களுடன் பழகுவதையோ வைத்துக் கொள்ளாமல், பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய அன்றில் தளபதி சரத் பொன்சேகாவுடன் தான் தொடர்புகளை பேணிக் கொள்ள விரும்பினார்.

இராணுவப் புலனாய்வு பிரிவினர் கருணா வெளிநாடு சென்று லண்டனில் சிறை வைக்கப்பட்டிருந்த சமயம், தனது மெய்க்காப்பாளர்கள் மூலம் பிள்ளையானைக் கொலை செய்ய திட்டமிட்டு இருப்பதாகவும், அதனால் அவர்களை (மெய்க்காப்பாளர்களை) முடித்து விட அறிவுறுத்தப்பட்டதால் அப்படியே செய்து, பின்னர் கருணா விடுதலை பெற்று திரும்பி வந்த பொழுது, பெட்டிப் பாம்பாக அடங்கி இருக்க வேண்டியிருந்தது என குறிப்பிடுகிறார் ஆஸாத் மௌலானா.

மெய்க்காப்பாளர்களின் கொலைகளுக்குப் பின்னர் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு, அதனது முதலாவது கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடந்ததாகவும், அன்றுதான் தாங்கள் முதல் தடவையாக பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்து, பின்னர் அவர் தங்களது இணைப்பாளராக பணியாற்றினாராம் என்றும் கூறப்பட்டது.

கருணாவின் பிரிவின் பின் அவரை ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இணைத்து, பின் கருணாவையும் பிள்ளையானையும் முரண்பட வைத்து, கருணா மோசடி செய்யப்பட்ட பாஸ்போர்ட்டில் லண்டனுக்குள் நுழைந்துள்ளார் எனக் காட்டி கொடுக்க வைத்து, யாவும் ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின், பின் புளொட் அமைப்பின் அமைப்பாளராக பதவியில் இருந்தவர் மூலம் முன்னெடுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

விடுதலைக்காக தமிழ் இளைஞர்கள் எங்கோ தொடங்கி, எவற்றுக்காகவோ சோரம் போய், தாங்களே அதற்கு எதிராக நெம்புகோல் கொடுத்தார்கள் என தமிழ் மக்கள் மற்றவர்களை குறை கூறாமல், இவர்களது முகங்களை பார்க்க வேண்டும்; அவர்களிடம் பதில்களைக் கேட்க வேண்டும்.

### ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கு

ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் தமிழர்கள் சார்பில் ஈடுபட்டிருந்தவர் சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன். இதில் மூன்றாவது எதிரியாக குற்றச்சாட்டப்பட்ட பிள்ளையானும் மற்றையோரும் விடுதலை செய்யப்பட்டமையையும் வழக்கின் ஆதாரங்களிலும் அதன் தள்ளுபடிக்கான காரணங்களிலும் புரிந்துணர்வு அவருக்கு இருக்கும்.

இந்த விடுதலையை எப்பொழுதுமே தர்க்கிப்பவர். ஆஸாத் மௌலானாவின்



பிள்ளயான்

சாட்சியப் படி நல்லாட்சி காலத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டபோது, பிள்ளையானுக்காக சட்டத்தரணியையும் ஒரு குழாமையுமே அமைத்துக் கொடுத்தவர் பஸில் ராஜபக்ஷ. இந்த சட்டத்தரணிகள் யாவருமே வழக்கு தகுந்த ஆதாரங்களில் பதியப்பட்டு இருப்பதால் பிள்ளையானைப் பிணையில் எடுப்பதோ அல்லது அவர் வெளிவருவதோ கஷ்டம் என்ற அபிப்ராயங்கள் தந்து, இராணுவப் புலனாய்வாளர்களின் அபிப்பிராய படி வழக்கை உடனடியாக நடத்தாது, தள்ளிப் போடவே திகதிகள் கேட்கப்பட்டு, அது தள்ளி போடப்பட்டது. சிறையில் இருந்த காலங்களில் தன்னை கெதியில் வெளியில் எடுக்க வேண்டுமெ



கருணா

னப் பிள்ளையான் நிர்பந்தித்ததும், பின்னர் தேர்தல் காலங்களில் மட்டக்களப்புக்கு சென்ற பஸில், மஹிந்த இருவருமே பிள்ளையானை சிறையில் சென்று சந்தித்தமையும், ஊடகச் செய்திகளாகவும் வந்தவை. பிள்ளையான் தான் தொடர்ந்தும் சிறையில் இருக்க முடியாது என அழுத்தங்கள் தந்தபோது, பஸில் தானொரு நீதிபதியை அணுகியிருக்கிறார் எனவும், வழக்குக் கோவைகளை அவரிடம் கொடுத்து, அதன்படி நடக்குமாறு கோரி, நீதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் முதல் மன்றுக்கு தரப்பட்ட வாக்குமூலங்கள் செல்லுபடியாகாது என மீள் ஆய்வு செய்யப்பட்டு, அந்த மீளாய்வு மனு மேல் நீதிமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு நீதிபதிகளின் முன் வந்து சாதகமாகத் தீர்க்க பட்டதாம்.

ஆயினும் பிணை கிடைக்காமல் வழக்குகள் இழுபறியில் அகப்பட, பிள்ளையான் தனது இராணுவத் தொடர்பளரான மேலதிகாரிக்கு தன் கைப்பட தமிழில் கடிதம் ஒன்றை தந்து, ஆஸாத் மௌலானாவை அதனை நேரடியாக உரியவரிடம் கையளிக்கும்படி பணிக்கப்பட்டதால் தாம் அவ்வாறு செய்ததாகவும் கூறுகிறார்.

அந்தக் கடிதத்தில் பிள்ளையான் 'நீங்களும் உங்களது அரசாங்கமும் எப்படி அதிகாரத்துக்கு வந்தது என்று உங்கள் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள். நான் இனியும் சிறையில் இருக்க முடியாது. இனிமேலும் என்னை வெளியில் எடுக்க நடவடிக்கை எடுக்க விட்டால், எல்லோரும் பிரச்சினையைச் சந்திக்க வேண்டிவரும்' – என்பதே அந்த கடிதத்தின் சாராம்சம்.

அது உடனடியாகவே பாதுகாப்புச் செயலாளருக்கு சென்று சேர்ந்து, பின் ஜனாதிபதியின் செயலாளர் தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகவும், சிறிது காலம் தரக்கேட்டுப் பின் 24 நவம்பர் 2020 பிள்ளையானுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் பிணை தந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக முன்னைய சட்டமா அதிபர் தான் மீளாய்வுக்கு உயர் நீதிமன்றில் மனுச் செய்வேன் என அறிவித்தாலும், அடுத்தவந்த சட்டமா அதிபர் 13 ஜனவரி 2021 இல் பிள்ளையான் தரப்புக்கு எல்லா வழக்குகளையும் இல்லாமல் செய்தார்.

"ஜோசப் பரராஜசிங்கத்திற்காக ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் குற்றப்பத்திரிகை கோப்புகள் காணாமல் போய் விட்டதன் பெயரில் வழக்கு தள்ளப்பட்டதற்கு எதிராக ஒரு ஆட்சேபனையையும் செய்யவில்லை. ஏன் என்பதை எல்லா தமிழ் மக்களும் ஊகிக்க முடியும்" – என்கிறது அவரது சாட்சியம்.

அவரது கூற்றின் காரணத்தை நான் அறிய மாட்டேன்.

(வளரும்....)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மூதறிஞர் ஓய்வுநிலைப் பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி அவர்களின் அறிவாற்றல்களைப் பயன்படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பம்

பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை ஓய்வுபெற்ற வேளை (1959)வெளிவந்த அவரது மணி விழா மலரிலே அறிஞர் ச.அம்பிகைபாகன் பண்டிதமணியின் ஆற்றல்களைப் பயன்படுத்தவேண்டும் எனும் பயனுறுதிமிக்க கட்டுரை மூதறிஞர் மா. சின்னத்தம்பியின் கல்விச் சிந்தனைகளைப் பயன்படுத்துவதற்கு ஆதர்சமானது. எமது நாட்டின் செல்வத்தினால், அறிவு வளம் பெற்றுப் பிற்காலத்தில் பிற நாடுகட்குச் சென்று இங்கு திரும்பாமலும், எங்கள் பலருக்குத் தெரியாமலும் மாண்டுபோன பல அறிஞர்களையும் நாம் அறியாமலில்லை. இத்தகைய துரதிஷ்ட நிலைக்கு நாங்களும் ஒரு காரணம் என்பதிலிருந்து தப்பித்துவிடமுடியாது. 'செய்ந் நன்றியறிதல்' எனும் உயர் விழுமியப் பண்பினையும் மனங் கொண்டு தமது 'மனைத்தக்க மாண்புடைய' துணைவியாரான சசிலேகா (செல்வி)வுடன் வெளிநாட்டிலிருந்து வந்து பயன்மிக்க அறிவுப் பங்களிப்பினை வழங்கும் விரல் விட்டெண்ணத்தக்கோரில் மூதக்க மா.சின்னத்தம்பி அவர்களும் ஒருவர்.

எமது கல்விப்போதனை மரபிலே கற்றலையும் கற்பித்தலையும் தனித்தனியானதென்று எண்ணிச் செயற்பட்டதொரு காலமிருந்தது. இவ்விரண்டினையும் பிரிக்க முடியாதவாறு செயற்படுவோரில் மா. சின்னத்தம்பி குறிப்பிடத்தக்க ஒருவர். இன்று புகழ் பெற்ற பாதிரியாராக விளங்குகின்ற ஒருவர், நீங்கள் தான் சேர் படிப்பிக்கிறீங்கள் என்று ஒருபோது மனந்திறந்து கூறியதாக பேராசிரியர் மா.சின்னத்தம்பி சொல்லியிருக்கிறார். இவரின் கற்பித்தல் திறன்தனியாகவும்விரிவாகவும்எழுதப்படவேண்டியது.

கற்பித்தலைவிட ஏராளமான பயனாளிகளுடன் தொடர்புடைய அம்சமாக 'அறிவுப் பரப்புகை' என்பது திகழ்கின்றது. பொருளியல், கல்வி எனும் இரு பயனுறு துறைகளின் ஆசானாக சின்னத்தம்பி அவர்கள் விளங்கியமையால் அவை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொண்டு வந்தார். பொருளியல் தொடர்பாக அரச நிதி, கிராமியப் பொருளாதாரம், தேசிய வருமானம், வெளிநாட்டு வர்த்தகம் எனும் நூல்களையும், கல்வித்துறை தொடர்பாக ஆசிரிய முகாமைத்துவம், இலங்கையின் முகாமைத்துவக் கல்வி, இலங்கையின் கல்விச் செலவு, பாடசாலை முகாமைத்துவம் – சமகாலத் தேவைகள், கல்வியின் பொருளியல், பாடசாலையும் சமூகமும், பாடசாலைகளை முகாமை செய்தல் – சமகால அணுகுமுறை, பரீட்சைகளுக்கு தயாராவது எப்படி? சமுதாய மாற்றமும் பாடசாலைகளும், ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் மொழி மூலமான ஆய்வாளர்களுக்கும் மிகவும் பயன்படக்கூடிய ஆராய்ச்சியும் நெறிமுறைகளும் எனும் நூல் இவ்வாண்டு (2023) வெளிவரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவரின் நூல்களிற் பல பல 'ஆனைப் பிரசவம்' என்று கூறத்தக்க தகுதி பெற்றவை.

'அறிவின் முன்னரங்கை மேலும் முன்னோக்கி நகர்த்தல்' என்பது தக்க வினாக்களினாலேதான் முடியும். விடையல்ல வினாத்தான் முக்கியம் எனும் தத்துவாசிரியர் சோக்ரடீஸ் அவர்களின் கற்பித்தல் முறையில் (வினாவுக்கு எதிர் வினா) மிகுந்த நம்பிக்கை கொண்டவர் சின்னத்தம்பி. ஒரு வினாவைத் தொடங்கி முடிப்பதற்கிடையில் பதில்சொல்லக்கூடிய அறிவாழமும் அகலமும் மிக்கவர் பேராசிரியர மா. சின்னத்தம்பி.

வினா முறையினைப் போலவே விமர்சனத் துறையிலும் அதிக ஈடுபாடுடையவர். இவரது முதலாவது நூலாகிய கிராமியப் பொருளாதாரம் (30.7.1979) எனும்கையடக்கமான நூலுக்கு பேராசிரியர்.க.கைலாசபதி அவர்கள் திருமுகம் மூலம் வெளிப்படுத்திய வழிகாட்டல் குறிப்புத்தான் தம்மைப் பிற்காலத்தில் பல கனதிமிக்க நூல்களின் ஆசிரியனாக்கியது என்கிறார்.

'புழுகுதல்' ஒருவனது முன்னேற்றத்திற்குத் தடையானதென்றும், தரமான விமர்சனம்தான் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுமென்றும், சவால்களையும் இவற்றோடு இணைத்து நகர்ந் தால் உச்சங்களைத் தொடலாம் என்றும் குறிப்பிடுகிறார்.

உத்தம ஆசிரியரான சின்னத்தம்பி, பொருளியல் துறை ஆசிரியராக இருந்தபோது சாதித்தவற்றைவிட, கல்வித்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்தபோதும், அதற்குப் பின்னர் இன்றுவரை அவர் சாதித்தவை அதிகம் என்பதனை அவர் அருகிருப்போர் அறிவர். கனிக்



மிக அதிகம் என்பதற்கு பேராசிரியர் சின்னத்தம்பி நல்ல உதாரணமானவர். உங்களுடைய பேராசிரியர் எந்த ஒரு விடயத்தைப் பற்றிக் கேட்டாலும் அது பற்றி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் மணிக்கணக்கில் சொல்லிக் கொண்டே இருப்பார். மனையியல் பாடந் தவிர என்று ஒரு தடவை இவரின் பாரியார் கூறி முடிப்பதற்குமுன், பேராசிரியர், கல்லாமற் பாதி குலவித்தை என்கின்றனர். சமையல் பெரிதும் பெண் பாலானோரின் குலத்தொழில். 'கவனம்' மட்டும்தான் அதன் முதலீடு என்று முடித்தார். கல்விப்புலத்தின் பல பக்கங்களிலும் பெரும் நிபுணராக விளங்கும் இவரிடம் 'இந்து நாகரிகம்' எனும் பாடம் தொடர்பாகவும் அறிய விரும்பிக் கேட்டபோது, அறிவியல் பூர்வமாகப் பல விடயங்களைத் தெரிவித்தார். இந்து நாகரிகம் தொடர்பான 'புரிதல்' அவரிடம் அதிகமிருந்ததனை அவரது சிந்தனைகள் வெளிப்படுத்தியன.

பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகத்திலே கற்ற காலத்திலே (1968-1972) புதிதாக இந்து நாகரிகம் பாடமாகத் தொடங்கப்பட்டபோது இவருடன் கற்ற பலர் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவத்தின் வழிகாட்டலில் இப்பாடத்தை சிறப்பாகக் கற்று அனைவரும் விரிவுரையாளர்களாகி, களனி, பேராதனை, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பணிபுரிந்த வரலாறும் பேராசிரியருக்குத் தெரியும்.

கற்பித்தலிலே, 'முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லுதல்'(From the whole to the part) 'பகுதிகளிலிருந்து முழுமைக்குச் செல்லுதல்'(From the part to the whole) எனும் இருவழி முறைகள் உள்ளன என்பது கற்பித்தலில் ஈடுபடுவோருக்குத் தெரியக் கூடும். இந்து நாகரிகத்தை இந்த இரண்டு வழியாலும் விளக்க முடியும். இந்து நாகரிகம் என்பது சமயம், மொழி, வரலாறு, பொருளாதாரம், அரசியல், தத்துவம், கலைகள், அறிவியல் போன்ற பலவற்றினைத் தன்னகத்தே கொண்டதொரு பெருங்கூட்டு இயல். மொழி, பண்பாடு, தத்துவம், கலாசாரம் எனும் துறைகளை உள்ளடக்கிய மானிடவியல் எனும் பீடத்தின் ஒரு கூறாகவுமிருந்திருக்கிறது.

உலகின் பிரபல்யமான மதங்களில் ஒன்றான கிறிஸ்தவம் தனது உலகளாவிய மதப் பரப்புகையில் தோல்வியினைக் கண்டது இந்து மதத்திலேதான் என்பதற்கான பல சாட்சியங்கள் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களிடமுண்டு. இந்து சமயத்தைப் பற்றித் தீவிரமாக ஆய்வினை மேற்கொள்பவர்கள் ஆங்கிலேயக் கிருஸ்தவர்களே. உலக நாகரிகங்களிலே மூத்த நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் என்பதனையும் அது அறாத் தொடர்ச்சியான வாழும் நாகரிகம் என்பதனையும் உலகறியச் செய்தவர்கள் கிறிஸ்தவர்களே. வேதங்கள், இதிகாச புராணங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் போன்றவற்றை மொழிபெயர்த்து ஆய்வு நடாத்திக் கொண்டிருப்பவர்களில் அவர்களே முன்னணியிலுமுள்ளனர். இந்நிலையில் அந்த நாகரிகத்துக்குச் சொந்தக்காரர்களான நாங்கள் அறிவியல் பூர்வமாகவும, நிறுவன ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எமது நாகரிகப் பரப்புகைக்கு எவ்வாறான பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற பலமான வினாவும் உண்டு.

இலங்கையின் வரலாற்றில் பௌத்த சமயம், சிங்கள மொழி என்பனவற்றின் வளர்ச்சிக்கென உருவாக்கப்பட்ட வித்தியோதயா, வித்தியாலங்கார எனும் பிரிவேனாக்கள் முறையே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, களனி எனும் பல்கலைக்கழகங்களாகி

என்னவென்றால் இலங்கைப் பல்கலைக்கழகங்களிலே இந்து நாகரிகம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதற்குப் பிரபல்யமான ஒரு தமிழ்ப் பேராசிரியர் தடையாக இருந்தமையாகும். எவ்வாறாயினும் மிக அண்மைக் காலத்திலாயினும் இந்துப்பீடம் ஒன்று கிடைத்தமை குறித்துப் பெருமைப்படலாம்.

வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி, நகரங்கள் தோறும் கலாசாலைகள் ஓங்க வேண்டும் என்று பாடினார் பாரதியார். இலங்கைப் பல்கலைக்கழகங்களிலே, இந்து நாகரிகத்தைக் கற்பதற்கு வரும் மாணவர்களுக்கான இந்துசமய பாடப் போதனைத் தரம் பாடசாலை மட்டத்தில் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன என்ற குறைபாட்டினையும் பேராசிரியர் சுட்டிக் காட்டத்தவறவில்லை.

இன்றைய பல்கலைக்கழகங்களுக்கு முன்னோடியாக அல்லது மூலமான நிறுவனம் சங்கமருவிய காலத்திலே செழுங்கலை நியமம் என்ற பெயரில் இருந்தமையினை அக்கால இலக்கிய வாயிலாக அறிகிறோம். எனவே சுயேச்சையாகவும், பரந்தளவிலும் இயங்கக்கூடிய இந்துநெறியினை தலைமைத்துவமாகக் கொண்ட ஒருநிறுவனம் அமைய வேண்டியது யாருக்கும் பாதகமானது அல்ல. அத்தகைய நிறுவனம் இலங்கையின் வடபகுதியிலாயினும் பிற இடங்களிலாயினும் பிற தேசங்களிலாயினும் அமையலாம். இந்த நிறுவனத்தலைவர் பல மொழிகளைக்கற்றிருக்கவேண்டியது கட்டாயமானது.

வத்திக்கான் சென்று கிறித்தவர்கள் கற்க வேண்டுமாயின் குறைந்தது அவர்கள் ஆறு மொழிகளையாவது கற்றிருக்க வேண்டுமெனப்படுகிறது. இலங்கையில் எமது செழுங்கலை நியமம் அமைவதாயின் குறைந்தது சிங்களம், தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும். இந்து நாகரிகத்தினை இந்து சமயத்தவர்கள் மாத்திரமின்றி பிறசமயத்தவரும் கற்கக்கூடிய முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஒப்பீட்டுக் கற்கைமுறை (Comparative studies) முக்கிய இடம்பெற்றிருக்கவேண்டும்.இந்து நாகரிகத்தோடு தொடர்புடைய பிற துறைகளைச் சேர்ந்த அறிஞர்களது பங்களிப்புகளையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.உலக நாடுகளிலே ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள் இருப்பதுபோன்று ஆராய்ச்சித் துறையும், ஆராய்ச்சிப் பேராசிரியர்களும் வேண்டும். உண்மையான சமய நெறியின்படி, வாழும் சமயிகளையும் உள்வாங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

இந்து நாகரிகத்துறையினை வளப்படுத்துவதற்கான நூல்கள் என்ற வகையில் நான்கு வகைப்பட்ட நூல்கள் பற்றிப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

1. பரீட்சைக்குப் பயன்படக்கூடிய வினா விடைக் குறிப்பு போன்றதான நூல்கள்.

2. இந்து நாகரிக அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதற்கான நூல்கள்.

3. இந்துக் கல்விச் சிந்தனைகளை மறுவடிவிற் கொண்டு வரும் நூல்கள். உதாரணம்: பேராசிரியர் கைலாசபதியின் பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் தமிழர் சமய வரலாறு.

4. சவால்களை எதிர்கொள்வதற்கான நூல்கள். உதாரணம்: முத்துக்குமார கவிராயர், ஆறுமுகநாவலர், கதிரை வேற்பிள்ளை, சபாபதி நாவலர் முதலானோரின் கண்டன, பிரதிக் கண்டன நூல்கள்.

இவற்றிலே பின்னர் குறிப்பிட்ட இரண்டு வகையான நூல்கள் இக்காலத்தில் எழுதப்படாதிருப்பது ஆரோக்கியமானது அல்ல. ஆய்விலே ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றைக் காரணம் கூறி மறப்பதும், புதிய மாற்றுச் சிந்தனைகளை முன்வைப்பதும் முக்கியமான விடயங்களாகும். அவை பற்றியும் நாம் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இக்கட்டுரை பேராசிரியரால் எவ்வித முன்னாயத்தமுமின்றிக் கூறப்பட்ட கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டவை. அவரது பவள விழா காலத்திலும் உடல் உள ஆரோக்கியத்துடன் இருக்கும் அவரது அறிவாற்றல்களை தக்கவாறு பயன்படுத்துவது சமூக, சமய பொறுப்புடையவர்களது கடமையாகும்.

பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி அவர்களின் 75 ஆவது பிறந்ததினம் (பவளவிழா) 30.01.2023 அன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## தேர்தல் பற்றி இந்த ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என ஒரு தரப்பினரும், தேர்தலை நடத்தக்கூடாது என பிறிதொரு தரப்பினரும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை முழுமையாக ஏற்றுக் கொள்வோம். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டு எம்மால் செயல்பட முடியாது – என்றார்.

## தேர்தல் ஆணைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எம்.எம்.மொஹமட் மற்றும் பி.திவாரத்னவுக்கும் பதவி விலகுமாறு வலியுறுத்தி தொலைபேசியின் அழைப்புகள் ஊடாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

தற்போது அவர்களுக்குத் தேவையான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் ஒரே தொலைபேசி இலக்கத்தில் இருந்து அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

அந்தத் தொலைபேசி இலக்கமானது காலி பிரதேசத்தில் குறிப்பிட்ட முகவரியுடன் கூடிய தொலைபேசி இலக்கமாகும். இருப்பினும், அந்த முகவரியில் உள்ளவர் தற்போது இலங்கையில் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த மிரட்டலு;கும் அவருக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

மிரட்டல் தொலைபேசி அழைப்புகள் அனைத்தும் வெளிநாட்டிலிருந்து வந்தவை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் யார் அழைப்பை எடுத்தார் என்பது தெரியவரவில்லை.

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு ஸ்ரீலங்கா டெலிகொம் ஆகியவற்றின் உதவியுடன் குற்றப் புலனாய்வுத்திணைக்களம் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

## வன்கொடுமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சந்தேக நபர் ஹொரண பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் என்று மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பயணித்த சிறிய லொறியொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மொரகஹஹேன, மில்லவ பகுதியில் குறித்த ஆசிரியர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது அவரை வழிமறித்துப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்க முயன்றார் என்று முறையிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஆசிரியை 119 அவசர அழைப்பு பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் பிரகாரம், மொரகஹஹேன பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

சம்பந்தப்பட்ட ஆசிரியைக்கும் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினருக்கும் இடையே பண கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் முரண்பாடு நிலவியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட 39 வயதான ஆசிரியை ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## கொள்ளைக் கும்பல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய், மூன்று கோயிலுக்கு அண்மையாக ஜனவரி 3ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கொள்ளை இடம்பெற்றது. 5 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை அச்சுறுத்தி இருத்தி வைத்து மூன்று பெண்களை அடித்துத் துன்புறுத்தி 12 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பித்தது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தினர்.

சுன்னாகம், இணுவில் பகுதிகளைச் சேர்ந்த 25, 26 வயதுகளையுடைய நான்கு சந்தேகநபர்களை அவர்கள் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதி, எஞ்சிய நகைகளை அடகு வைத்ததற்கான பற்றுச்சீட்டுகள் மற்றும் வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று வீதியில் சென்ற ஆசிரியையைத் தாக்கிவிட்டு நகையை கொள்ளையிட்ட சம்பவத்துடனும் இந்தச் சந்தேகநபர்களுக்குத் தொடர்புள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## காணித் தகறாறில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

புல்மோட்டை – 01 வட்டாரத்தைச் சேர்ந்த எஸ்.எம்.பதூர் (42வயது) மற்றும் புல்மோட்டை– நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த எம்.எம்.சலீம் (42வயது) ஆகிய இருவரும் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

## இளைஞர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்தார். அம்பாந்தோட்டை சூரியவெவவில் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் போராட்டத்தில் இளைஞர்களுக்கு ஆட்சியில் பங்குபற்றுவதற்கு வலியுறுத்தப்பட்டதாகக் கூறிய அவர், அதனை நனவாக்கும் முயற்சியே இந்த நடவடிக்கை என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன 30

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மற்றுமொரு பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் செல்லக்குட்டி செல்வகணேஸ் சுகாதார அமைச்சால் நியமிக்கப் பட்டுள்ளார்.

கொழும்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளில் பணியாற்றியுள்ள இவர் தற்போது சொந்த மாவட்டத்திற்கு மாற்றலாகி வந்துள்ளார். தனது மாவட்ட மக்களுக்குச் சேவையாற்றும் விருப்புடன் அவர் இந்த நியமனத்தைக் கேட்டுப் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி இந்து மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரிகளின் பழைய மாணவன் செல்வகணேஸ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு பிரதேச சபைக்கும் அதன் எல்லைக்குட்பட்ட அந்தந்த கிராம சேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இளைஞர் ஆலோசனை சபையொன்று உருவாக்கப்படும்.

உள்ளூராட்சி சபையின் பணிகள் முறையாக நடைபெறுகிறதா என இந்தச் சபை ஆராயும். இதன் மூலம் பிரதேசசபையில் மோசடி ஊழல் இலஞ்சம் ஒழிக்கப்படும். வெளிநாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு எமது நாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிலர் திருடர்களை பிடிப்பதாக கூறினாலும், எவ்வாறு பிடிப்பது என்று பிடிக்கும் முறையை கூறுவதாக இல்லை. திருடப்பட்ட வளங்கள் மற்றும் பணத்தை மீட்பதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் ஐக்கிய மக்கள் சக்தி அதனை நிறைவேற்றும் என்று எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்தார்.

## மோ. சைக்கிள்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் சாவகச்சேரி சங்கத்தானையை சேர்ந்த சண்முகலிங்கம் பிரகாஸ் (வயது 27) உயிரிழந்தார். அவரது சடலம் உடல்கூறு பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது

சம்பவ தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 15 ஞாயிற்றுக்கிழமை 29.01.2023 கதிர் 334

## ‘ஐஸ்’ வைத்திருந்த இருவர் கைது

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 280 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இருவரை நேற்று மாலை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பாலையூற்று, திருகோணமலை 2

# கூட்டமைப்புக்கு எதிராக அரசோடு ஒட்டி நின்றவர்கள் இன்று அதனைப் பாதுகாக்கப் புறப்பட்டுவிட்டார்களாம்

### சாவகச்சேரியில் சுமந்திரன் விளாசல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.29

கூட்டமைப்பிற்கு எதிராக செயல்பட அன்று அரசுடன் ஒட்டி நின்று ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்தவர்கள் இன்று கூட்டமைப்பை பாதுகாப்பதாகக் கூறுகின்றனர். அதனையும் நம்பி சிலர் காவித் திரிகின்றனர்.

இவ்வாறு சாவகச்சேரியில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது விளாசித் தள்ளினார் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றாலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைக் குறிப் பிட்டே அவர் இதனைத் தெரிவித்தார் என்பது வெளிப்படையானது.

சுமந்திரன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஜனநாயக 2

## சுமந்திரனை ஆமை என திட்டிய ரெலோ செல்வம்

ஆமை புகுந்த வீடு ஒரு போதும்விளங்காது,அதேபோல சுமந்திரன்உள்ளேவந்ததுதான் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சிதைவுக்குக்காரணம்நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கடுமையாகச் சாடினார்.

சாவகச்சேரியில்வெள்ளிக்கிழமைநடைபெற்றஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில்தமிழ்அரசுக் கட்சிக் கூட்டம் இடம்பெற்ற போதே பிரிந்து சென்று இந்தத் தேர்தலில் பங்குபற்றுவது என முடிவு எடுத்தார்கள். இவர்கள் இந்த முடிவை எடுத்த அதே நேரத்தில் தான் வடக்கு-கிழக்கில் உள்ள தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என மட்டக்களப்பில் மக்கள் போராடினார்கள்.

அதேசமயம், அனைத்து தமிழ் கட்சிகளும் 2

## தூள் கடத்தவில்லை, தலையாட்டவில்லை சந்தியில் நின்று காட்டிக்கொடுக்கவில்லை

### சுமந்திரன் ஆவேசம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.29

எந்தச் சந்தியிலும் நின்று எவனையும் காட்டிக் கொடுக்கவில்லை,எங்கேயும்முகத்தை மூடிக்கொண்டுபோய் தலையாட்டவில்லை,தூள்கடத்தவில்லை இதை எப்போதும் எங்கும் யாருக்கும் துணிந்து சொல்வேன்.

இப்படி ஆவேசப்பட்டார் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன். சாவகச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தற்போதைய அரசியல் கள நிலவரங்கள் குறித்த கேள்விகளுக்குப்பதிலளித்தார்.

தமிழ் ஆயுதக் குழுக்கள் பலகூட்டமைப்புடன் இணைந்திருந்த காலத்தில் பேசாதிருந்துவிட்டுதற்போது அவர்கள் தொடர்பில் சுமந்திரன் குறை கூறுகிறார் என்று சுட்டிக்காட்டப் படுகின்றதே என 2

## ஜானக்கவை பதவி நீக்க அரசு முயற்சி

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக்க ரத்னாயக்கவை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான முன் முயற்சிகளில் அரசு இறங்கியிருக்கிறது.

அவரைப் பதவி விலக்க ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தயாராக இருக்கின்றனர் என்று மின்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். ”ஆணைக்குழுத் தலைவர் மீது நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான குற்றப் பத்திரிகையும் தயாரிக்கப்பட்டு விட்டது” என்றார் அமைச்சர்.

மின்சார அமைச்சர் முன் வைத்துள்ள புதிய மின் கட்டண பட்டியலை 8

# இனவாதத்தை தூண்டவே 13 குறித்து இப்போது பேச்சு



### நாட்டை வங்குரோத்துக்குள்ளாக்கியோரின் சதி என்கிறார் கிரியெல்ல

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை எல்லாக் கட்சிகளுமே ஏற்றுக்கொண்டு அதன் கீழ் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. அப்படியிருக்கும்போது தேர்தலைக் கருத்தில் கொண்டு இனவாதத்தைத் தூண்டுவதற்கான சதித் திட்டமாகவே இப்போது 13 பற்றிப் பேசுகிறார்கள். 8

## மலையக மக்களின் 200 வருடங்கள்



இலங்கையில் தேயிலைத் தோட்டங்களில் உழைப்பதற்காக இந்திய 2



இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தின நிகழ்வுகளுக்கான ஒத்திகைகள் கொழும்பு காலி முகத் திடலை ஒட்டிய வீதியில் நேற்று தொடங்கின. இதனையொட்டி பகல் நேரங்களில் இந்த வீதியூடான போக்குவரத்து வேறு மார்க்கங்கள் ஊடாகத் திருப்பி விடப்பட்டுள்ளது

# இலங்கையின் சுதந்திர தினம் தமிழ் அரசுக்கும் கரி நாள்தான்

### மட்டக்களப்பில் போராட்டம்: பல்கலை மாணவர் போராட்டத்துக்கும் ஆதரவு என அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.29

இலங்கையின் சுதந்திர தினமான 4ஆம் நாளை தமிழரின் கரிநாளாக தமிழ் அரசுக் கட்சி மட்டக்களப்பில் அனுஸ்டிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினம் தமிழர்களிற்கு மட்டுமன்றி இலங்கை வாழ் மக்கள் அனைவருக்குமே கரிநாள்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். 2

## தூள் கடத்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

தனது பதிலில் சுமந்திரன் தெரிவித்ததாவது:

இணைந்திருந்த காலத்திலும் நான் பல தடவை கூறியுள்ளேன் இப்போதும் கூறுகின்றேன். எந்தச் சந்தியிலும் நின்று எவனையும் காட்டிக் கொடுக்கவில்லை. எங்கேயும் முகத்தை மூடிக் கொண்டுபோய் தலையாட்டவில்லை. தூள் கடத்தவில்லை. இவ்வாறானவர்களும் கூட்டமைப்புடன் இணைந்திருந்தனர். அதன்போதும் நான் இதனை பகிரங்கமாக கூறியுள்ளேன் அதனை இப்போதும் கூறுகின்றேன். தலையாட்டிப் பழக்கதோசம் அவர்களைவிட்டு இன்றும் போகவில்லை.

20 வருடமாக கூட இருந்தவர்களை நல் வழிப்படுத்த எடுத்த முயற்சியிலும் நாம் தோல்வி அடைந்து விட்டோம். அதை நான் ஒப்புக்கொள்கின்றேன்.

அதில் ஒருவர் 80ஆம் ஆண்டு இதனைச் சாதித்தோம், 1985இல் இதனைச் சாதித்தோம் 1987இல், 1989, 1994 இல் 2001இல் 2004இல் இதனைச் தாதித்தோம் என வரலாற்றைப் பட்டியலிடுகின்றார். அதே பட்டியலில் எத்தனையாம் ஆண்டுகளில் யார் யாரைப் போட்டுத் தள்ளினார்கள், எத்தனையாம் ஆண்டு அரச கூலிப்படையாக சேர்ந்தியங்கினார்கள் என்றதனைப் பட்டியலிட மறந்துவிட்டார்கள் – என்றார்.

## இலங்கையின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"பெப்பரவரி 4ஆம் திகதியை இருள் நாளாக கடைப்பிடிப்பதோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்றைய தினம் எம்மால் ஓர் கறுப்பு போராட்டமும் நடத்தப்படும்.

இதேநேரம், வடக்கில் பல்கலைக் கழக மாணவர்கள் முன்னெடுக்கும் அன்றைய போராட்டத்திற்கும் எமது முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கப்படும்" என்றார் அவர். .

## கூட்டமைப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோசலிச குடியரசாம். ஆனால் இந்த நாட்டில் ஜனநாயகமும் இல்லை சோசலிசமும் இல்லை. இதனை தமிழர்களும் கூறுகின்றோம் சிங்களவர்களும் கூறுகின்றனர். தன்னிடம் இல்லாதவற்றைத்தான் இந்த நாடு தனது பெயரில் வைத்துள்ளது.

இதேபோன்று எமக்கு எதிராக வென புறப்பட்டவர்களும் தம்மிடம் இல்லாத விடயத்தை கூட்டணிப் பெயரில் வைத்துள்ளார்கள். கட்சியின் பெயரில் ஜனநாயகம், தேசியம் என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள் அவைஎவற்றையுமே தம்மிடம் கொண்டிருக்காத கட்சிகள்– என்றார்.

## சுமந்திரனை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுபடவேண்டும் என முன்னாள் போராளி ஒருவர் முல்லைத்தீவில் சாகும் வரை பட்டினிப் போராட்டம் நடத்தினார். ஆனால் இந்த மக்கள் போராட்டமோ, போராளியின் போராட்டமோ தமிழ் அரசுக் கட்சியின் காதில் எடுபடவில்லை.

அவர்கள் மக்களை நேசிப்பவர்களாக இருந்திருந்தால் மக்களின் போராட்டத்தை கவனத்தில் எடுத்திருப்பார்கள். ஒரு சிறிய தேர்தலில் பிரிந்து செயற்படுவதாக முடிவெடுக்க சுமந்திரன் போன்றவர்கள் கூட்டமைப்பிற்குள் நுழைந்தமைதான் காரணம் என்பது தெட்டத்தெளிவான உண்மை.

ஆமை புகுந்த வீடு ஒருபோதும் விளங்காது. சுமந்திரன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள் நுழைந்த பின்னர்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விலகிச் சென்றார். அதன்பின் சுரேஷ்பிறேமச்சந்திரனின் கட்சி விலகிச் சென்றது.

இப்படியாக அவர் நுழைந்த பின் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வாக்காளர்களும் குறைந்தனர். நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் குறைந்தது. இன்று 10 நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் காணப்படுகிறோம்.

முன்பு 6 கட்சிகளாக இருந்த கூட்டமைப்பு இறுதியில் 3 கட்சிகளாக குறைந்திருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீள இணைக்க சுமந்திரன் மறுத்திருந்தார். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒரு விடுதலையின் கட்சியாகவே எதிர் காலத்தில் திகழும். விடுதலைத் தலைவரின் அங்கீகாரம் ஊடாகவே அது ஆரம்பிக்கப்பட்டது. இந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இனி கட்சிகளின் பெயர்கள் உச்சரிக்கப்படாது.

குத்துவிளக்கு சின்னத்தை எவரும் எடுத்துச்செல்லவும் முடியாது. தேர்தலுக்கு பின்னர் நாம் இணைவோம் என தமிழரசு கூறுவது மக்களை ஏமாற்றும் பிரச்சாரம். தேர்தல் முடிந்த பின் இணைவதாக இருந்தால் குத்துவிளக்கு சின்னத்தில் கூட்டமைப்பில் ஓர் கட்சியாகவே வரும் இணைய முடியும். வேறு எந்த கட்சியினுடைய தலைமையிலும் இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணையாது.

இது தேர்தலுக்கான கூட்டு அல்ல. மக்களின் ஆணை குத்துவிளக்கிற்கு கிடைக்கும்போது கூட்டமைப்பில் இருந்து விலகிச்சென்றவர்கள் மீண்டும் இணையும் வாய்ப்பை ஏற்படுத்த முடிவதுடன்–

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வெளியே தேசியக் கட்சியாக இருக்கும் அத்தனை பேரும் இந்த கூட்டமைப்பிற்குள் இணைய கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் என்பதனை இத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறோம் – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## ஐஸ் வைத்திருந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் கிண்ணியா பாலத்தில் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வம்சாவளி மக்கள் அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் இந்த வருடத்துடன் நிறைவுபெறுகின்றன. அதனை நினைவுகூரத்தக்க வகையில் அட்டன் மல்லியப்பு சந்தியிலிருந்து மலையக மக்களின் வாழ்வியலையும் கலை, கலாசார அம்சங்களையும் பிரதிபலிக்கும் வகையில் ஊர்வலம் இன்று நடத்தப்பட்டது. மல்லியப்பு சந்தியில் தொடங்கிய ஊர்வலம், அட்டன் நகர் ஊடாக அட்டன் டி.கே.டபிள்யூ, கலாசார மண்டபத்தினை சென்றடைந்தது. ஊர்வலம் கலை கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறப்பட்ட போதும் மக்களின் அரசியல் குரல்களும் அதில் ஒலிக்கத் தவறவில்லை.

மலையகத்தை அபிவிருத்தி செய்ய தயங்குவது ஏன்? மலையக மக்களை சிதைக்காதே? உறுதியளித்த பல்கலைக்கழகம் எங்கே? புதிய பிரதேச செயலகங்கள் வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஊர்வலத்தில் சென்றோர் தாங்கியிருந்தனர்.

டி.கே.டபிள்யூ. கலாசார மண்டபத்தில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன




# நமது பார்வை

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

## மறக்கப்பட்ட 200 வருடங்கள்

பிரிட்டிாரின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் உருவாக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் உழைப்பதற்காக கிட்டத்தட்டக் கொத்தடிமைகளாக அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகிவிட்டன.

இலங்கையில் இன்று வாழும் ஒவ்வொருவரும் தேநீர் குடிக்காதவர்களாக இருக்கமாட்டார்கள். மிகச் சிறப்பான தேநீருக்காக உலகம் முழுவதும் நன்கு அறியப்பட்டது இலங்கை. அந்த ஏற்றுமதியின் மூலம் சராசரி ஆண்டுக்கு 2500 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. மொத்த ஏற்றுமதி வருவாயில் இது கிட்டத்தட்ட 14 சதவீதம்.

பொருளாதார நெருக்கீட்டை எதிர்கொள்ளும் இந்தச் சமயத்திலும் முற்றிலும் இயற்கைப் பசளை மூலமான உற்பத்தி என்று கூறி கடந்த அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தேயிலைத் தோட்டங்களின் உற்பத்தியை நாசமாக்கிய பின்னரும்கூட கணிசமான டொலர் வருமானத்தை ஈட்டித் தருவது தேயிலை உற்பத்தித்துறைதான்.

அதன் அச்சாணியாக, முதுகெலும்பாகத் தமது உடலையும் உயிரையும் கொடுத்து உழைத்தவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கையின் மொத்த மக்கள் எண்ணிக்கையில் 4.2 விழுக்காடு மட்டுமே இருக்கக் கூடிய இந்தக் மக்கள் கூட்டத்தினர்தான் ஒட்டுமொத்த இனங்களிலும் மிக மோசமாகக் கைவிடப்பட்டவர்கள் என்பதில் மாற்றுக் கருத்திலை. இதற்காக நாம் அனைவருமே வெட்கப்படவேண்டும்.

இன்றைய நவீன அரசுகளும் முதலாளிகளும் இந்த மக்களையும் இன்னும் அங்கீகரிக்கப்படாத கொத்தடிமை முறைமைக்குள்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கும் நாளுக்கு ஆயிரம் ரூபா கூலி என்பதைக் கூறப் பெற முடியாதவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள். கல்வி, சுகாதாரம், இருப்பிடம் என்று அனைத்து அடிப்படை வசதிகளும் மறுக்கப்பட்டவர்களாகவே ஒட்டுமொத்தமாக நாட்டின் ஆன்மாவை உலுக்கிக் கேள்வி கேட்கும் நிலையில் அந்த மக்களை வைத்திருந்தது குறித்து அனைவருமே வெட்கப்படவேண்டும்.

இந்த ஒடுக்குமுறைக்கு சிங்களவர்களை மட்டும் கைகாட்டிவிட்டுத் தப்பிவிட முடியாது நாட்டின் ஏனைய இடங்களைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள். சிங்களவர்கள் எவ்வளவுக்கு அந்த மக்களை அடிமைப்படுத்தினார்களோ அதேயளவிற்கு அவர்களுடன் சேர்ந்து மலையகத் தமிழர்களை ஒடுக்குமுறைக்குத் துணை போயிருக்கிறார்கள் ஏனைய தமிழர்களும். 200 வருடங்களாக நீடிக்கும் அவர்களின் அடிமை வாழ்க்கைக்கு அனைவருமேதான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த 200ஆவது ஆண்டிலாவது அந்த மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க அனைத்துத் தரப்புக்களும் முன்வரவேண்டும். குறிப்பாக ஈழத் தமிழர்கள், கடந்த காலங்களில் அந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் துணை நின்றதற்கான பிராயச் சித்தமாக அவர்களின் விடிவுக்காக முழு மூச்சுடன் உழைக்கவேண்டும்.

# தேர்தல் இடம்பெறுமா? இல்லையா? இறைவனுக்கு மாத்திரமே தெரியும்!

## தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு



தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பது தற்போதும் நிச்சயமற்ற நிலைமையிலேயே உள்ளது. அதனை இறைவன் மாத்திரமே அறிவார்.

வேட்பாளர்கள் தமது பணத்தை செலவிட முன்னர் உண்மையில் தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டம் கொழும்பிலுள்ள கட்சி தலைமையகத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இடம்பெற்றது.

மத்திய குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கை சின்னத்தில் போட்டியிடும் தொகுதிகளிலும், கூட்டணியாக போட்டியிடும் தொகுதிகளிலும் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் மத்திய குழு கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் விரைவில் மாவட்ட மட்டத்தில் எமது கூட்டங்கள் ஆரம்பமாகும். அதற்கமைய கம்பஹாவில் எமது முதலாவது கூட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகொப்டர் சின்னத்திலான கூட்டணியில் எவ்வித பிளவுகளையும் ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை. எனவே கூட்டணியாக போட்டியிடும் தொகுதிகளில் எவ்வாறு இணைந்து செயற்படுவது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியுள்ளோம்.

இந்த அரசாங்கம் தேர்தலை நடத்துமா இல்லையா என்பதை அந்தக் கடவுள் மாத்திரமே அறிவார். காரணம் அரசாங்கம் ஆரம்பம் முதலே தேர்தலை நடத்துவதற்கான நிதி இல்லை என்று கூறிக் கொண்டிருக்கிறது.

இதற்கு மத்தியில் தற்போது ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகியுள்ளார். மின் துண்டிப்பை நிறுத்த முடியாது என்று கூறுகின்றனர். இவ்வாறு வெள;வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நாம் முன்னோக்கிச் சென்றுக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, உண்மையில் தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பதை அரசாங்கம் விரைவில் அறிவிக்க வேண்டும். காரணம் வேட்பாளர் தமது பணத்தை செலவிட முன்னர் அவர்களுக்கு தீர்க்கமான முடிவொன்று வழங்கப்பட வேண்டும். தற்போதும் தேர்தல் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. விரைவில் இது நிச்சயமான நிலையை அடையும் என்று எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

# புதையல் தோண்ட சென்ற 8 பேர் கைது!

புதையல் தோண்டுவதற்கு வானில் பயணித்துக்கொண்டிருந்த 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பாரு பிரதேசத்தில் இராணுவ வீரர்களால் போடப்பட்டிருந்த வீதி தடையில் வான் ஒன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது புதையல் தோண்டுவதற்காக பயணித்துக் கொண்டிருந்த நிலையில் சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 21 முதல் 47 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் மொரட்டுவ, பதவிய, பிலிமத்தலாவ, கல்கிஸ்ஸ, உடபுஸ் ஸல்லாவ, கரந்தெனிய மற்றும் வவு னியா பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர். சந்தேக நபர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில்ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு பிராந்திய அலுவலகங்கள் திறப்பு!

*கடவுச்சீட்டுகளை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் 50 பிராந்திய அலுவலகங்களை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் தெரிவிக்கையில் -*

*தற்போது வவுனியா, குருநாகல், மாத்தறை மற்றும் கண்டி ஆகிய நான்கு பிராந்திய அலுவலகங்கள் மற்றும் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகம் உள்ளது.*

*இதுதவிர ஏனைய இடங்களில் கடவுச்சீட்டு வழங்கும் பணியை மேற்கொள்வதற்காக 50 புதிய அலுவலகங்கள் பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*அந்த வகையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் குறித்த பிராந்திய அலுவலகத்துக்குச் சென்று புகைப்படங்கள் மற்றும் விவரங்களை அதிகாரிகளிடம் கொடுத்து, தங்கள் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.*

*மேலும் இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்தவுள்ளதுடன் அது உலகின் அனைத்து நாடுகளிலும் பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

# இந்தியா ஜனநாயகத்தின் தாய் தமிழ்நாடு கல்வெட்டு ஆதாரம்

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

புதுடெல்லி, ஜன. 30

இந்தியா ஜனநாயகத்தின் தாய் என்பதை தமிழ்நாட்டின் உத்திரமேரூர் கல்வெட்டுகள் பறைசாற்றுவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதல் மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா - ஜனநாயகத்தின் தாய் என்ற புத்தகம் குறித்து குறிப்பிட்டார். அதில், ஆர்வத்தைத் தூண்டக்கூடிய பல்வேறு வியங்கள் இருப்பதாகத் தெரிவித்த அவர், மிகச் சிறந்த கட்டுரைகளை அந்த புத்தகம் கொண்டிருப்பதாகக் கூறினார்.

நமது நரம்புகளில், நமது கலாசாரத்தில், நாம் மேற்கொள்ளும் பணிகளில் ஜனநாயகம் இருப்பதாகத் தெரிவித்த பிரதமர் மோடி, இந்திய சமூகம் இயற்கையாகவே ஜனநாயக சமூகம் எனக் குறிப்பிட்டார். புத்தமத துறவிகளின் சங்கத்தோடு இந்திய நாடாளுமன்றத்தை அம்பேத்கர் ஒப்பிட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் மிகச் சிறிய ஆனால் புகழ்பெற்ற கிராமமான உத்தரமேரூரில் உள்ள கல்வெட்டில் கிராம சபை தேர்தல் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இது 1100-1200 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட கல்வெட்டு என்றும் சுட்டிக்காட்டிய பிரதமர் மோடி, உலகையே ஆச்சரியப்படுத்தக்கூடியது இது என தெரிவித்துள்ளார்.

இந்த கல்வெட்டு ஒரு சிறிய அரசியல் சாசனம் என்றும் பிரதமர் மோடி வர்ணித்துள்ளார்.

இதேபோல், 12ம் நூற்றாண்டில் கர்நாடகாவில் கட்டப்பட்ட பசவேஸ்வரா ஆலயத்தில் அனுபவ மண்டபம் என ஒரு மண்டபம் உள்ளதையும், எவர் ஒருவரும் தனது அனுபவத்தை எவ்வித தயக்கமும் இன்றி கூறுவதற்காக இது கட்டப்பட்டது என்பதையும் தெரிவித்த நரேந்திர மோடி, இந்த மண்டபத்தில் ஏராளமான விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளார்.



## இந்திய விமான விபத்து

### போர் விமானங்கள் நடுவானில் மோதி ஒரு விமானி சாவு



இந்திய விமானப் படையின் 2 போர் விமானங்கள் நடுவானில் மோதியதில் ஒரு விமானி உயிரிழந்தார். 2 விமானிகள் பாராசூட் உதவியுடன் உயிர் தப்பினர். மரங்கள் மீது விழுந்த அவர்கள் படுகாயமடைந்தனர்..

மத்திய பிரதேசத்தின் குவாலியரில் இந்திய விமானப் படைத் தளம் உள்ளது. அங்கிருந்து மிராஜ்-2000 ரக போர் விமானமும், சுகோய்-30 ரக போர் விமானமும் நேற்று காலை வழக்கமான பயிற்சிக்காக புறப்பட்டன. மிராஜ் விமானத்தில் ஒரு விமானியும், சுகோய் விமானத்தில் 2 விமானிகளும் இருந்தனர்.

குவாலியர் அருகே முரைனா பகுதியில் 2 போர் விமானங்களும் ஒரே திசையில் அருகருகே பறந்தபோது எதிர்பாராதவிதமாக உரசி மோதின. இதில் மிராஜ் விமானத்தில் தீப்பிடித்தது. சுகோய் விமானத்தில் ஓர் இறக்கை சேதமடைந்தது.

தீப்பிடித்த மிராஜ் விமானம் முரைனா மாவட்டம், பாகர்கார் கிராமத்துக்கு அருகே உள்ள வனப்பகுதியில் விழுந்து நொறுங்கியது. அந்த விமானத்தை இயக்கிய விமானி ஹனுமந்த் ராவ் சாரதி உடல் கருகி உயிரிழந்தார். அப்பகுதியில் சுமார் 3 இடங்களில் போர் விமானத்தின் உடைந்த பாகங்கள் சிதறி விழுந்தன.



## பேருந்து பள்ளத்தில் பாய்ததில் பாகிஸ்தானில் 39 பேர் இறப்பு

பாகிஸ்தான்: பலுசிஸ்தானின் லாஸ்பேலா மாவட்டத்தில் பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்ததில் 39 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குவெட்டாவிலிருந்து கராச்சிக்கு கிட்டத்தட்ட 48 பயணிகளுடன் பேருந்து அதிவேகமாகச் சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் லாஸ்பேலா அருகே பேருந்து திரும்பும்போது பாலத்தின் தூணில் மோதி, பள்ளத்தில் விழுந்து தீப்பிடித்தது.

விபத்து நடந்த இடத்தில் இருந்து இதுவரை 17 உடல்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைனின் தாக்குதலில் 300 ரஷ்ய படையினர் சாவு

### பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று தகவல்

உக்ரைனின் மகீவ்கா பகுதி ரஷ்யப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அங்கு உக்ரைன் படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் எண்ணிக்கை 300க்கு மேல் இருக்கும் என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மகீவ்காவில் கடந்த முதலாம் திகதி நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் தங்கள் நாட்டைச் சேர்ந்த 89 படையினர் உயிரிழந்தனர் என்று ரஷ்யா அறிவித்தது. தங்கள் தரப்பு உயிர்ச் சேதம் குறித்து ரஷ்யா வெளிப்படையாகக் கூறியது அதுவே முதல்முறையாகும்.

எனினும், இந்தப் போரின் தொடக்கத்திலிருந்தே பொய்யான தகவல்களை ரஷ்யா பரப்பி வருகிறது. அந்த வகையில், மகீவ்கா தாக்குதலில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் எண்ணிக்கையும் குறைத்தே வெளியிடப்பட்டுள்ளது. உண்மையில், அந்தத் தாக்குதலில் 300க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்திருப்பார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில், தங்களின் நெருங்கிய அண்டை நாடான உக்ரைன் இணைவது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது. எனினும், நேட்டோவில் இணைவதற்கு வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தலைமையிலான தற்போதைய உக்ரைன் அரசு விருப்பம் தெரிவித்தது. அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கொசான், ஸபோரிஷியா ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றியுள்ளது.

## ஒரு மாதத்துக்குள் 55 பேருக்குத் தூக்கு

### ஈரானில் பயங்கரம்

இந்த மாதத்தில் மட்டும் இதுவரை 55 பேரை ஈரான் அரசு தூக்கிலிட்டுள்ளதாக அந்த நாட்டைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இது குறித்து 'ஈரான் மனித உரிமைகள் அமைப்பு' என்ற பெயரில் நோர்வேயில் செயல்பட்டு வரும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது:

2023ஆம் ஆண்டு தொடங்கி ஒரு மாதம் நிறைவடைவதற்குள் இதுவரை 55 சாவுத் தண்டனைக் கைதிகளுக்கு ஈரான் அரசு அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளது. அவர்களில் 4 பேர் ஆடைக் கட்டுப்பாட்டு சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்; 37 பேர் போதைப் பொருள் வைத்திருத்தல் போன்ற சாதாரண குற்றங்களில் ஈடுபட்டவர்கள்.

மாசா அமீனி இறப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 107 பேர் தூக்குக் கயிறை எதிர் நோக்கியுள்ளனர் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈரானின் சாச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் கடந்த செப்டம்பர் மாதம் கைது செய்யப்பட்ட மசா அமீனி என்ற 22 வயது பெண் காவலில் இருந்தபோதே உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து அங்கு அரசுக்கு எதிராக தீவிர போராட்டங்கள் நடைபெற்றன. அந்தப் போராட்டங்களை மிகக் கடுமையான முறையில் அடக்கி வரும் ஈரான் அரசு, ஏராளமான போராட்டக்காரர்களுக்கு சாவுத் தண்டனை விதித்து, அதனை நிறைவேற்றியும் வருகிறது.

இதற்கு சாவதேச அளவில் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

மனித உரிமை மீறல்கள் அதிகம் நடைபெறுவதாக குற்றம் சாட்டப்படும் ஈரான், அதிக எண்ணிக்கையில் சாவுத் தண்டனைகளை நிறைவேற்றி வரும் உலகின் சொற்ப நாடுகளில் ஒன்றாகும்.

# நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை வெகுவிரைவில் எரிமலை போன்று வெடிக்கும்!

## நாலக கொடஹேவா எச்சரிக்கை



ரணில் – ராஜபக்ச அரசாங்கத்தால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. கடன் பெறல், இருக்கும் வளங்களை விற்றல் ஆகியவை ஜனாதிபதியின் பொருளாதார கொள்கையாக உள்ளன.

பொருளாதார நெருக்கடி வெகு விரைவில் எரிமலை போல் வெடிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வெளியிடும் நிகழ்வு பத்தரமுல்ல பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு–

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கநல்லாட்சி அரசாங்கத்தில்அமுல்படுத்தியதவறான பொருளாதாரக் கொள்கையை தற்போதும் அமுல்படுத்துகிறார். நல்லாட்சி அரசாங்கத்தில் பொருளாதார கொள்கையை 69 லட்ச மக்கள் புறக்கணித்து 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கையை நாட்டில் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எம்மிடம் குறிப்பிட்டவர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்திய பொருளாதார கொள்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படவில்லை.

மக்களை நெருக்கடிக் குள்ளாக்கும் வகையில் பொருளாதாரக் கொள்கை செயற்படுத்தப்பட்டது. பல்வேறு நெருக்கடிக் குள்ளான மக்கள் இறுதியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

69 லட்சமாக புறக்கணிக்கப்பட்ட பொருளாதார கொள்கை மீண்டும் துரதிர்ஷ்டவசமாக அமுல்படுத்தப்பட்டது.

வரி அதிகரிப்பு, கடன் பெறல் மற்றும் மிகுதியாக இருக்கும் தேசிய வளங்களை விற்றல் ஆகியன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளன. அரசாங்கத்தின் வரி சீர்திருத்தங்களால் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ரணில் – ராஜபக்சர்களால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

பொருளாதாரப் பாதிப்பு வெகு விரைவில் எரிமலை போல் வெடிக்கும். பலவீனமான அரசாங்கத்தை மாற்றியமைத்தால்தான் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண முடியும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் அரசாங்கத்தின் முடிவு ஆரம்பமாகும்.
– என்றார்.



## நல்லூர் பிரதேச சபையின் சுகாதார தொழிலாளர்களால் இரத்ததானம்!

நல்லூர் பிரதேச சபை சுகாதார தொழிலாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 16 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபையில் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமில் சுகாதார தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் இரத்ததானம் வழங்கினார்கள்.

## காரைதீவு பிரதேச சபைக்கு முதன்முதல் ஈ.பி.டி.பி. போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்குஈழமக்கள்ஜனநாயகக் கட்சி முதன்முதலாக போட்டியிடுகின்றது.

கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட முகவரால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுவை தேர்தல் திணைக்களம் ஏற்று கொண்டு உள்ளது.

தமிழர்விடுதலைகூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் முன்னாள் வேட்பாளர்கள் அடங்கலாக 14 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

# சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுப்பு!

## ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டு

கொவிட் – 19 வைரஸ் பரவல் சர்வதேச ரீதியில் மிகமோசமான பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளைத் தோற்றுவித்ததுடன், அதன் தாக்கங்கள் தற்போதும் தொடர்கின்றன.

அந்தவகையில் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரளவிலான வணிகங்கள் பொருளாதார ரீதியில் தீவிர சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதுடன் பல வணிகங்களை மூடவேண்டிய நிலையேற்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் தெரிவித்துள்ளது.

கொவிட் – 19 வைரஸ் பரவலின் பின்னர் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரளவிலான வணிகங்கள்முகங்கொடுத்திருக்கும்பொருளாதார சவால்கள் தொடர்பில் மார்கா நிலையத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் முடிவுகளை உள்ளடக்கிய 42 பக்க அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு –

கொவிட் – 19 வைரஸ் பரவல் சர்வதேச ரீதியில் மிகமோசமான பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளைத் தோற்றுவித்ததுடன், அதன் தாக்கங்கள் தற்போதும் தொடர்கின்றன.

குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான வணிகங்கள் பொருளாதார ரீதியில் தீவிர சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றன.

கடந்த இருவருட காலத்தில் உலகளாவிய ரீதியில் வணிக நடவடிக்கைகளின் போக்கு பெருமளவிற்கு மாற்றமடைந்துள்ளது. சுகாதார நெருக்கடியின் விளைவாக விதிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், உலகசந்தையை அணுகல் மற்றும் விநியோகக் கட்டுப்பாடுகள், வங்கி கொடுக்கல், வாங்கல் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் காரணமாக நாட்டில் இயங்கும் அனைத்து வணிகங்களும் பொருளாதார ரீதியான தளம்பல் நிலைக்கு உள்ளாகின.

இவ்வாறானதொரு பின்னணியில் தமது வணிகங்கள் தொடர்பில் நேர்மறையான எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடியவாறான பல்வேறு நடவடிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிக முயற்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டன.

இருப்பினும் முழுமையாக நோக்குமிடத்து உற்பத்தி மற்றும் சேவைத்துறைசார் வணிகங்களால் முன்னெடுக்கப்பட்ட 'பொறுப்பு வாய்ந்த வணிக நடவடிக்கைகளுடன்' ஒப்பிடுகையில் விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த வணிக முயற்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த வணிக நடவடிக்கைகள் வரவேற்கத்தக்க வகையில் அமைந்தன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு!





வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வியாபார நிலையங்களுக்கான விற்பனை விழிப்புணர்வு தொடர்பான கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. வலி. மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரனதுதலைமையில்கூட்டம்நடைபெற்றது.

இதன்போது கடைகளைப் புதிதாகப் பதிவு செய்வதற்கான அறிவுறுத்தல்கள், கடந்த ஆண்டு சிறந்தஉற்பத்திகளைவிநியோகித்தகடைகளுக்கான சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், சங்கானை பொது சுகாதார வைத்திய அதிகாரி ஜதுநந்தன், வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிஜீவா, பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

# தாய்மார்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்க 5 ஏக்கரில் போசனைமிகுந்த மரக்கன்றுகள் நடல்!





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக தாய் சேய் நலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எச்.ரிஸ்பினால் தாய் சிசு போசாக்கு திட்டத்தின் கீழ் தாய்மார்களின் குருதிச் சோகை நோயைக் குறைப்பதற்காகவும் முகாமைத்துவம் செய்வதற்காகவும் திருக்கோவில் தங்க வேலாயுதபுரம் கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் போசனை மிகுந்தபயிர் இனங்களைநடும் நிகழ்வு கடந்த சனிக் கிழமை ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

கல்முனை சுகாதார பிராந்தியத்தில் தாய்மார்களின் குருதிச் சோகையின் அளவு 28 வீதமாகக் காணப்படுகின்றது. அதேபோன்று பொத்துவில் மற்றும் இறக்காமல் பிரதேசங்களில் 40 வீதமாகக் காணப்படுகின்றது. இதனைக் குறைத்து தாய்மார்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களின் கீழ் ஒரு பகுதியாக போசனைக் கன்றுகளை நடும் இந்தத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த நிகழ்வில் திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரிமற்றும்பிரதேசவைத்திய அதிகாரி, பொது சுகாதார உத்தியோகத்தர்கள், பொது சுகாதார மாதுக்கள் மற்றும் ஏனைய கள உத்தியோகத்தர்களும் பங்குபற்றினார்கள்.

இற்தத் திட்டத்துக்கு அம்பாறை மாவட்ட செயலகம், திருக்கோவில் பிரதேச செயலகம், விவசாயத்திணைக்களம், சொத்துகள் அடிப்படையிலான சமூக மேம்பாட்டு அமைப்பு என்பன ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவத் தளபதிகளின் உரிய ஆலோசனைகள் இன்றி பலாலியைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்கவேண்டாம்!

யாழ்ப்பாணம் பலாலியைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்க முன் ஆலோசனை பெறவேண்டும் என சரத் வீரசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

பலாலியைச் சூழவுள்ள காணிகளை பொது மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் பாதுகாப்புப் படைத் தலைவர்களிடம் ஆலோசனை பெறுமாறு கோரியுள்ளார்.

அவ்வாறு ஆலோசனைகளை பொற்றுக் கொள்ளாமல் மேற்படி பகுதிகளில் உள்ள காணிகளை பகிர்ந்தளிப்பது அபாயகரமானது எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

# கந்தளாய் பேராறு கிராமிய அபிவிருத்தி சங்கத்தினால் தையல்பயிற்சி நிலையம்





(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வேண்டுகோளுக்கினங்க கந்தளாய் பேராறு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் தையல் பயிற்சி நிலையம் கடந்த கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கந்தளாய் பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான தையல், மனையியல் மற்றும் கைவினை பயிற்சிக்கான நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு, தெரிவு செய்யப்பட்ட யுவதிகள் தொடர்பாகப் பயிற்சி நெறிகளைத் தொடர்வதற்காக இந்தப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்ஷா குமாரி, கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர், பிரதேச செயலக அதிகாரிகள், பேராறு மேற்கு கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், உப தலைவர் உட்பட நிர்வாகிகள் மற்றும் முன்னாள் கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம். பைரூஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.எம்.றியாஸ் மற்றும் பயிற்சி நெறியில் கலந்து கொண்டோர் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

# பிரதேச மட்ட மக்களின் சகவாழ்வை மேம்படுத்த வேலைத்திட்டம் ஆரம்பம்!





(மாளிகைக்காடு நிருபர்)


நாட்டில் நல்லிணக்கம், சகவாழ்வு, சமாதானம், ஐக்கியம் ஆகியவற்றை ஏற்படுத்தும் முகமாக அனைவருக்குமான உரிமைகளும் சேவைகளும் உறுதிப்படுத்தப்பட்டு மதிக்கப்படுதல் வேண்டும். என்ற அடிப்படையில் ஏ.சி.ரி.ஈ.டி. நிறுவனத்தின் அனுசரனையில் இறக்காமம் ஹிக்மா சகவாழ்வு மன்றம் இணைந்து செயற்படுத்தும் 'சகவாழ்வை கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்களிப்பு' எனும் செயலமர்வு மன்றத்தின் தலைவர் எம்.ஐ. பாயிஸ் தலைமையில் இறக்காமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் கலந்து கொண்டதுடன்கௌரவவிருந்தினர்களாக கணக்காளர் றிம்ஷியா அர்சாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், கிராம நிலதாரி நிர்வாக உத்தியோகத்தர் இந்திரசிறியசரட்ன பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெற்ற இன வெறுப்பு செயற்பாடுகளின் பின்னர் தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் உணரப்பட்டாலும், நமது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நம்பிக்கையும் புரிந்துணர்வும் இதுவரையில் சரியான முறையில் ஏற்படுத்தப் பட வில்லை. நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அதற்கான வேலைத் திட்டம் முதலில் மக்களின் நேரடி பங்கேற்பின் ஊடாகவே சகவாழ்வை உறுதிப்படுத்த முடியும். இந்நிகழ்விற்கு, வடக்கு மாகாண இளைஞர் சேவைகள் பணிப்பாளர் ஏ.அமீர் சிறப்பு வளவாளராக கலந்து கொண்டார்.

மேலும், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச். வஹாப், கிராம சேவை உத்தியோகத்தர்களான பீ.சாமிலா, எம்.எல். கிரோர் ஜஹான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.எம். சபானா உட்பட சகவாழ்வு மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மெல்பனில் ஆவூரானின் சின்னான் குறுநாவல்!



ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமானஆவூரான் சந்திரனுக்கு இந்த ஆண்டு மணிவிழா ஆண்டாகும்.

இவர் எழுதிய சின்னான் (குறுநாவல்) வெளியீடு, நேற்று (சனிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு மெல்பனில் பேர்விக் மூத்த பிரஜைகள் மண்டபத்தில் நடைபெற்றது. எழுத்தாளர், வானொலி ஊடகவியலாளர் திருமதி சாந்தினி புவநேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் , எழுத்தாளர் ஆவூரானின் வாழ்வும் பணிகளும் பற்றியும் சின்னான் குறுநாவல் பற்றியும் இலக்கிய ஆர்வலர்கள் உரையாற்றினர்.

ஆவூரானின் முதலாவது கதைத் தொகுதியான ஆத்மாவைத் தொலைத்தவர்கள் நூல் சில வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வெளியீடாக வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நூலை கொழும்பு ஞானம் இலக்கியப் பண்ணை பதிப்பித்தது. தற்போது வெளியாகியிருக்கும் சின்னான் குறுநாவல் யாழ்ப்பாணம் ஜீவநதி வெளியீடாக ஆவூரானின் மணிவிழாக்காலத்தில் வரவாகியுள்ளது.



## ஆஸி. ஓபன் டென்னிஸில் முதல் முறையாக

# சம்பியன் பட்டம் வென்றார் பெலாரஸின் சபலென்கா

ஆஸ்திரேலிய ஓபன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார் பெலாரஸின் அர்யனா சபலென்கா. இது அவர் வெல்லும் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம். விம்பிள்டன் சாம்பியன் எலெனா ரெபைக்கினாவை 4-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார் சபலென்கா.

நிகழாண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியாக ஆஸி. ஓபன் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் ராட்லேவர் மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

விம்பிள்டன் சாம்பியனான கஜகஸ்தானின் எலனா ரெபைக்கினாவுடன் மோதினார் பெலாரஸின் அர்யனா சபலென்கா. இந்தத் தொடரின் இறுதி விருந்தாக இந்த ஆட்டம் அமைந்திருந்தது.

சபலென்கா மைதானத்தில் நிலை கொள்வதற்குள் இளம் வீராங்கனையான ரெபைக்கினா 34 நிமிடங்களில் முதல் செட்டை 6-4 என கைப்பற்றினார். எனினும் இரண்டாவது செட் ரெபைக்கினாவுக்கு கடும் சவாலாக அமைந்தது. 57 நிமிடங்கள் நீடித்த இந்த செட்டில் 3-3 என சமநிலை ஏற்பட்டது.

முதல் சாவீஸ் போடும் வாய்ப்பு ரெபைக்கினாவுக்குகிடைக்கவில்லை. 2 பிரேக் புள்ளிகளை அவர் சோத்தாலும், சபலென்கா ஆதிக்கம் செலுத்தி ஒரு ஏஸ் சாவீஸை போட்டு 5-3 என முன்னிலை பெற்றார். தொடர்ந்து அற்புதமாக ஆடி 6-3 என இரண்டாவது செட்டை தன் வசப்படுத்தினார் சபலென்கா.

மூன்றாவது செட்டில் எதிராளி தவறு புரிவார் என காத்திருந்து இருவரும் ஆடினர். ஆனால் சபலென்கா தனது ஆதிக்கத்தை நழுவவிடாமல் பார்த்துக்கொண்டார். 6-4 என மூன்றாவது செட்டையும் கைப்பற்றி, முதல் கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டத்தை பெற்றார்.

முதல் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிய மகிழ்ச்சியில் மைதானத்தில் ஆனந்த கண்ணீருடன் அமர்ந்தார் சபலென்கா.

இது தொடர்பாக அவர் கூறியது: கடந்த ஆண்டு பல்வேறு இறக்கங்களை சந்தித்தேன். ஆனால் எனது குழுவைச் சேர்ந்தவர்கள் பக்கபலமாக செயல்பட்டனர். இதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எலெனா ரெபைக்கினா மிகவும் அற்புதமான வீராங்கனை. எதிர்காலத்தில் இருவரும் பல்வேறு போட்டிகளில் குறிப்பாக கிராண்ட்ஸ்லாம் இறுதி ஆட்டங்களில் சந்திப்போம் என்றார்.

இந்த வெற்றியால் சபலென்கா இரண்டாம் நிலைக்கு உயர்ந்துள்ளார். ரெபைக்கினாவும் முதல் 10 இடங்களில் நுழைந்துள்ளார்.

இதற்கு முன்பு ஆஸி. ஓபனில் சபலென்கா 2021, 2022 இல் நான்காம் சுற்றோடு வெளியேறினார். ரெபைக்கினா 2020இல் மூன்றாம் சுற்று வரை முன்னேறினார்.

# ஹாக்கி உலகக் கிண்ணம் இன்று இரவு பலப்பரீட்சை

## ஜேர்மனியா, பெல்ஜியமா வெல்லப்போவது யார்?

எஃப்ஐஎச் உலகக் கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியின் சாம்பியன் பட்டத்தை வெல்லப் போவது யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ள நிலையில், ஞாயிற்றுக்கிழமை இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் பெல்ஜியம்-முன்னாள் சாம்பியன் ஜெர்மனி மோதுகின்றன.

ஜனவரி 13ஆம் திகதி இந்தியாவின் ஒடிஸா மாநிலம், புவனேசுவரம், ரூர்கேலாவில் தொடங்கிய உலகக் கோப்பை போட்டி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

அரையிறுதி ஆட்டங்களில் ஆஸி.யை வீழ்த்தி ஜெர்மனியும், நெதர்லாந்தை வீழ்த்தி பெல்ஜியமும் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றன.

பெல்ஜியம் அணி கடந்த 2018இல் முதன்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தொடர்ந்து டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலும் தங்கப் பதக்கத்தை கைப்பற்றி வலுவான நிலையில் உள்ளது.

பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட அணிகளே தொடர்ச்சியாக 2 முறை சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளன. அதே சாதனையை படைக்குமா பெல்ஜியம் என எதிர்பார்ப்பு நிலவுகிறது.

பெல்ஜிய அணியில் 11 வீரர்கள் 30 வயதுக்கு மேலும், 3 பேர் 35 வயதுக்கு மேலும் உள்ளனர். ஆனால் அவர்கள் முழு உடல்தகுதியுடன் ஆடி வருகின்றனர் என்பதை ஆட்ட முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இரண்டு பெரிய போட்டிகளில் பட்டம் வென்ற அணியே தற்போதும் ஆடி வருவது கூடுதல் சாதகமாகும். பெல்ஜிய அணியில் சிறந்த பார்வர்ட், டிபன்ஸ், பெனால்டி கார்னர் நிபுணர்கள் உள்ளனர்.

தலைசிறந்த கோல்கீப்பரான வின்சென்ட் வனாஷ் இருப்பது பலமாகும். நட்சத்திர ஸ்ட்ரைக்கர் டாம் பூன் 7 கோல்களை அடித்து எதிரணிக்கு அச்சத்தை உண்டாக்கி உள்ளார். பெனால்டி கார்னர் நிபுணர் அலெக்சாண்டர் ஹென்ட்ரிக்ஸ் இல்லாத நிலையிலும் பெல்ஜிய வீரர்கள் சிறப்பாக ஆடி வருகின்றனர்.

**மீண்டு எழும் ஜெர்மனி:**

2002, 2006ஆம் ஆண்டுகளில் சாம்பியன் பட்டம் வென்ற ஜெர்மன் அணியில் இளம் வீரர்கள் நிறைந்துள்ளனர். ஆனால் முக்கிய ஆட்டங்களில் பின்தங்கி இருந்தாலும் போராடி மீண்டு எழும் குணம் அவர்களிடம் உள்ளது. காலிறுதியில் இங்கிலாந்து, அரையிறுதியில் ஆஸ்திரேலியாவிடம் 0-2 என பின்தங்கி இருந்த நிலையில், போராடி வென்று இறுதிக்கு தகுதி பெற்றது ஜெர்மனி.

இது பெல்ஜிய அணிக்கு சிக்கலை ஏற்படுத்தும். ஜெர்மன் அணியில் ஹாட்ரிக் கோலடித்த கோன்ஸலோ பெய்லட், மேட்ஸ், கிராம்பஸ்ச், நிக்லாஸ் வெல்லேன் ஆகியோர் சிறப்பாக ஆடி வருகின்றனர்.

ஜெர்மனியை குறைத்து மதிப்பிடவில்லை:

ஜெர்மன் அணியை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. போராடி வென்றுள்ளது. மிகவும் கடினமான அணியாக உள்ளது. அவர்களது ஆட்டத்தை மதிப்பீட்டு எங்கள் உத்தியை வகுப்போம் என பெல்ஜிய பயிற்சியாளர் மைக்கேல் வேன் டெல், கேப்டன் பெலிக்ஸ் டேனேயர் கூறியுள்ளனர்.

இரு அணிகளுக்கு இடையே நடைபெற்ற 35 ஆட்டங்களில் பெல்ஜியம் 15இல் வென்றுள்ளது. ஜெர்மனி 13 முறையும் வென்றுள்ளது. 7 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. பெல்ஜியம் தனது சாம்பியன் பட்டத்தை தக்க வைக்குமா, அல்லது ஜெர்மனி மூன்றாவது முறையாக சாம்பியன் ஆகுமா என்பது இன்று இரவு தெரிந்துவிடும். அரையிறுதியில் தோற்ற ஆஸ்திரேலியா-நெதர்லாந்து அணிகள் வெண்கலப் பதக்கத்துக்காக மோதுகின்றன.





# அனைத்தும் பெண்கள்!

தென்னாப்பிரிக்காவில் நடைபெறவுள்ள ஐசிசி மகளிர் ரி20 உலகக் கோப்பை போட்டிக்கு பெண்களுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் அனைத்து பெண்கள் நடுவர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வரும் பெப்ரவரி 10 முதல் 26 வரை மகளிர் ரி20 உலகக் கோப்பை போட்டிகள் தென்னாப்பிரிக்காவில் நடைபெறுகின்றன. இதற்கான அனைத்து மகளிர் நடுவர் குழுவில் 3 ஆட்ட நடுவர்கள், 10 கள, மற்றும் தொலைக்காட்சி நடுவர்கள் என அனைவரும் பெண்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்ட நடுவர்கள்: ஜிஎஸ். லட்சுமி (இந்தியா), ஷான்ட்ரே ப்ரிட்ஸ் (தென்னாப்பிரிக்கா), மிச்செல் பெரேரா (இலங்கை).

கள மற்றும் தொலைக்காட்சி நடுவர்கள்:

விருந்தா ரதி (இந்தியா), சூ ரெட்பொன் (இங்கிலாந்து), எலைஸ் ஷெரிடியன் (ஆஸ்திரேலியா), கிளேர் போலோஸாக் (ஆஸ்திரேலியா), ஜாக்குலின் வில்லியம்ஸ் (மே.இந்திய தீவுகள்), கிம் காட்டன் (நியூஸிலாந்து), லாரன் அகென்பக் (தென்னாப்பிரிக்கா), அன்னா ஹாரிஸ் (இங்கிலாந்து), நிமலி பெரேரா (இலங்கை).

கடந்த சில ஆண்டுகளில் மகளிர் கிரிக்கெட் கணிசமாக வளர்ந்துள்ளது. இதன் ஒரு பகுதியாக உயர்ந்த நிலையில், பெண்களுக்கும் உரிய பங்கு இருக்கவேண்டும் என்பதில் ஐசிசி தீவிரமாக உள்ளது. கிரிக்கெட்டில் ஆடவர், பெண்கள் இருவருக்கும் சம வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்பது எங்கள் நோக்கம். எங்கள் பெண் நடுவர்களுக்கு தொடர்ந்து நாங்கள் ஆதரவு தருவோம்" என்றார்.

# யூத வழிபாட்டுத் தலம் மீது இஸ்ரேலில் துப்பாக்கிச் சூடு

## 7 பேர் உயிரிழந்தனர்



இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள ஜெருசலேம் பகுதியில் அமைந்துள்ள யூத வழிபாட்டுத் தலத்தில் பாலஸ்தீன ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 7 போ உயிரிழந்தனர்.

அந்த நாட்டில் அண்மைக் காலமாக இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் இடையே போா பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அதனை மேலும் தீவிரப்படுத் தும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து இஸ்ரேல் அதிகாரிகள் கூறியதாவது:

ஜெருசலேமின் சிட்டி ஆஃப் டேவிட் பகுதியிலுள்ள யூத வழிபாட்டுத் தலம் அருகே பாலஸ்தீன பயங்கரவாதி வெள்ளிக்கிழமை சரமாரி துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இதில் நடுத்தர வயதைச் சோந்த 6 பேரும் ஓர் இளைஞரும் உயிரிழந்தனர்; 3 போ காயமடைந்தனர்.

சம்பவத்தைத் தொடாந்து அந்தப் பகுதிக்கு ஏராளமான பாதுகாப்புப் படையினா விரைந்தனா. இறுதியில், தாக்குதல் நடத்திய பயங்கரவாதி சுட்டுக்கொல்லப்பட்டாா என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2008ஆம் ஆண்டுக்குப் பிறகு இஸ்ரேலில் நடத்தப்பட்டுள்ள மிக மோசமான தாக்குதல் இதுவாகும்.

இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்கும் பாலஸ்தீனாகளுக்கும் இடையே இந்த மாதத் தொடக்கம் முதலே பதற்றம் நிலவி வந்தது.

பாலஸ்தீன அகதி முகாம்களுக்குள் நுழைந்து தேடுதல் நடத்திய இஸ்ரேலியப் படையினரின் தாக்குதல்களில் 29 பாலஸ்தீனாகள் உயிரிழந்தனர்.

மேற்குக் கரை பகுதியில் ஆயுதக் குழுவினரின் ஆதிக்கம் நிறைந்த ஜெனீன் அகதிகள் முகாமில் இஸ்ரேல் ராணுவத்தினா தேடுதல் வேட்டையில் வியாழக்கிழமை ஈடுபட்டனா். இதில் 60 வயது பெண் உள்பட 9 போ உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான போா பதற்றத்தை அதிகரிக்கும் என்று அமெரிக்கா கவலை தெரிவித்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில், பாலஸ்தீனத்தின் காஸா பகுதியிலிருந்து 2 ஏவுகணைகள் இஸ்ரேல் மீது வெள்ளிக்கிழமை வீசப்பட்டன. அதற்கு பதிலடியாக இஸ்ரேலும் காஸா மீது வான் வழித் தாக்குதல் நடத்தியது.

இந்தப் பதற்றத்தைத் தணிப்பதற்காக, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சா ஆன்டனி பிளிங்கன் அந்தப் பிராந்தியத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (ஜன. 29) வருகிறாா். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் நீண்ட கால மாக நீடித்து வரும் பிரச்னைகளுக்கு முடிவு காண் பதற்காக சாவதேச நாடுகள் தொடாந்து முயற்சி மேற் கொண்டு வருகின்றன.

எனினும், அண்மையில் நடைபெற்ற இஸ்ரேல் தோதலுக்குப் பிறகு மிகவும் தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. எனவே, சமாதனப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் குறைவாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில், பல ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரேலியாகள் மீது தற்போது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜெருசலேம் யூத வழிபாட்டுத் தலத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட மறுநாளே, மேலும் ஒரு பாலஸ்தீனா மற்றொரு யூத வழிபாட்டுத் தலத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தினாா். பதிமூன்றே வயதான அந்த சிறுவன் (படம்) நடத்திய தாக்குதலில் 47 வயது நபரும் அவரது 23 வயது மகனும் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனா. தாக்குதல் நடத்திய சிறுவனை போலீஸாா வளைத்துப் பிடித்தனா.

## ஈரானில் நிலநடுக்கம் 7 பேர் உயிரிழந்தனர்

ஈரானில் உள்ள கோய் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 7 பேர் உயிரழந்தனர். இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.9 ஆக பதிவாகி உள்ளது.

ஈரான் நாட்டின் பல பகுதிகளில் உணரப்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் 440 பேர் காயமடைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் ஈரான்-துருக்கி எல்லைக்கு அருகிலுள்ள கோய் நகரில் சனிக்கிழமை இரவு 9:44 மணிக்கு (உள்ளூர் நேரம்) ஏற்பட்டது. கோய் நகருக்கு தென்-தென்மேற்காக 14 கி.மீ தொலைவில் 10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு (USGS) தெரிவித்துள்ளது.

ஈரானின் மேற்கு அஜர்பைஜான் நகரின் பல பகுதிகளில் இந்த நிலநடுக்கம் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்டை நாடான கிழக்கு அஜர்பைஜானின் நகரின் தலைநகரான தப்ரிஸ் உள்பட பல நகரங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

### ஜானக்காவை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு அனுமதித்தால் அந்த நாளில் இருந்துளந்தவிதமின்வெட்டும்இல்லாமல்மின்சாரத்தை வழங்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### ஜானக்காவை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டைவங்குரோத்துநிலைமைக்குஉள்ளாக்கியவர்கள் தற்போது புதிய நாடகமொன்றை அரங்கேற்றப் பார்க்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல. நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தம் இன்றும் அரசியலமைப்பில் காணப்படுகிறது. அதன் கீழ் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் மாகாண சபைகளை ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை ஏற்றுக் கொண்டதால்தான் தேர்தலில் போட்டியிட்டனர்.

தற்போது தேர்தலுக்காக புதிய நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளமையால், இனி தேர்தலில் வெற்றிபெற இனவாதத்தைத் தூண்டுவதே இலகுவான விடயம். எனவே தான் அதனைச் செய்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2023 இல் வெளியிடப்பெற்றது.